Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 146 | புதன்கிழமை | சித்திரை 08 ஆம் நாள் 21 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 செய்தி : 021 493 0000
விலை : ரூ.30 விளம்பரம்: 021 493 1111

## ஒருவாரமே விடுமுறை!

கொழும்பு, ஏப். 21
இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை நாள்கள் ஒரு வாரமாகக் குறைக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் 19 ➤

# போரில் இறந்தவர்களையும் அஞ்சலிக்க அனுமதியுங்கள்

### யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்த, அரச பாதுகாப்புடன் ஏற்பாடுகள் இடம்பெறுவதைப்போல், கடந்த போரின்போது உயிரிழந்தோரையும் நினைவுகூருவதற்கு இந்த அரசு அனுமதி வழங்க வேண்டும் என யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 19 ➤



## ஈஸ்டர் தாக்குதல் படுகொலை; 2ஆம் ஆண்டு நினைவேந்தல்!

### இன்று காலை 8.45 மணிக்கு அஞ்சலி

கொழும்பு, ஏப்.21
உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவுதினம் இன்று நாடெங்கிலும் கடைப்பிடிக்கப்படவுள்ளது.
2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம், 19 ➤

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் பல மர்மங்கள்

### சபையில் ஹரின் காரசாரம்

கொழும்பு, ஏப்.21
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர்கள் நால்வர் உட்பட அதிகமான அதிகாரிகள் இடமாற்றப்பட்டது ஏன்?
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு 19 ➤

## அடையாளமற்ற தளங்கள் மீதே சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

### ஊடகத்துறை அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஏப்.21
உரிமையாளர்களின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத இணையத்தளங்கள் மற்றும் வெளியிடும் தகவல்களுக்குப் பொறுப்புகூற முடியாத சமூக வலைத்தளங்கள் என்பவை தொடர்பில் மாத்திரமே சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
இவ்வாறு அமைச்சரவை பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான 19 ➤

### முச்சந்தி முரளி



பிள்ளையிப்பிராக்கு சாட்டு எண்டுற மாதிரி, மேதினத்தை நிப்பாட்ட கொரோனா ஒரு சாட்டு கண்டியளோ"

## பின்வாங்கிய கர்தினால்!

கொழும்பு, ஏப்.21
நேற்றுமுன்தினம் கூறிய கருத்தில் இருந்து, 180 பாகைக்கு மீளத் திரும்பியவராக, 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல்கள் அரசியல் ஆதாயம் தேடும் நோக்குடன் நடத்தப்பட்டவை என்ற அர்த்தப்பட தாம் கூறவில்லை என கொழும்பு மறைமாவட்ட பேராயரும் இலங்கையிலுள்ள கத்தோலிக்கர்களின் தலைமைக்குருவுமான கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.
தமது அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கு தாக்குதல் மேற்கொண்டவர்களைபகடைக்காய்களாக பெயர் குறிப்பிடாத சில தரப்புக்கள் பயன்படுத்தியுள்ளன என கூறியுள்ளேன் என தம்மை 19 ➤

## ஹெரோய்ன் கடத்தல்: தம்பதி கைது

யாழ்ப்பாணம், ஏப்.21
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஹெரோய்ன் கடத்திய குற்றச்சாட்டில் கணவனும், மனைவியும் அச்சுவேலிப் பொலிஸாரால் நேற் 19 ➤

## இளம் குடும்பத் தலைவர் அல்வாயில் வெட்டிக்கொலை

### ஆறு பேர் மருத்துவமனையில் நேற்று மதியம் கொடூரம்

யாழ்ப்பாணம், ஏப்.21
பருத்தித்துறை, அல்வாயில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் குடும்பத் தலைவர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். ஆறு பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது.
இரு பிள்ளைகளின் தந்தையான அல்வா 19 ➤

## கொரோனா தீவிர நிலைமை; மே தின பேரணிகளுக்கு தடை

### இராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப்.21
இலங்கையில் இம்முறை மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் இரத்துச் செய்ய கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தீர்மானித்துள்ளது என அதன் தலைவரான இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலைத் 19 ➤

## யாழில் தொற்றுடன் 7 பேர் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஏப்.21
யாழ்ப்பாணத்தில் நேற்று மேலும் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் 19 ➤




noolaham.org | aavanaham.org

# நன்றிக் கடனைத் தீர்ப்பதற்கே விக்கியை முதல்வராக்கினோம்

## தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப். 21**

**நீதிபதியாக இருந்தபோது விக்னேஸ்வரன் எமக்குச் செய்த நன்றிக்கடனுக்காகவே அவரை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க சம்மதம் தெரிவித்தேன் என தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது தன்னை வேட்பாளராக போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அழைத்து வந்தார் என விக்னேஸ்வரன் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சக தமிழ்க் கட்சிகள் என்னை முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுமாறு ஆலோசனை முன்வைத்தன. அதேநேரம் எமது கட்சியின் வெளிச் செயற்பாட்டாளர்கள் விக்னேஸ்வரனின் பெயரை பரிசீலிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். நான் பதவிகளுக்காக ஆசைப்பட்டவன் அல்லன். போராட்டப் பாதையைக் கடந்து வந்தவன். அந்த வகையில் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்கு எதிரான போராட்டத்தில் கைது செய்யப்பட்டு எட்டு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டோம். அந்தக் காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக இருந்த விக்னேஸ்வரன் கைது செய்யப்பட்ட எமக்கு பிணை வழங்கினார். அவர் செய்த நன்றிக் கடனுக்காக அவரது பெயரை ஏற்றுக்கொண்டு சக கட்சிகளுடன் பேசி முடிவெடுத்தோமே தவிர சம்பந்தன் அவரை அழைத்து வரவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பொது வேட்பாளராக போட்டியிட்ட விக்னேஸ்வரன் ஒரு லட்சத்துக்கு அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று முதலமைச்சரானார். பின்னர் தனியான ஒரு கட்சியை ஆரம்பித்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 21 ஆயிரம் விருப்பு வாக்குகளை மட்டுமே அவரால் பெற முடிந்தது. இந்த நிலையில் தனியான ஒரு கட்சியில் இருந்து கொண்டு விக்னேஸ்வரன் எனக்கு முதலமைச்சர் வேட்பாளருக்கு தகுதி போதாது என தெரிவிப்பது எனக்கு கவலை அளிக்கின்றது - என்றார். (ப-20)

# இந்தியாபோன்று இங்கும் மோசமடைய வாய்ப்பு

## எச்சரிக்கின்றது பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஏப். 21

'இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை இனங்காண்பதற்கான பி.சி.ஆர். மற்றும் எழுந்தமானமான அன்டிஜென் பரிசோதனைகளை நாளொன்றுக்கு 10 ஆயிரம் என்ற அளவுக்கேனும் அதிகரிக்க வேண்டும். இல்லையேல் இந்தியா தற்போது எதிர்கொண்டிருக்கும் மோசமான கொரோனா நிலைமையை இலங்கையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உருவாகும் இவ்வாறு பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

'தமிழ் சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. கொரோனாத் தடுப்பு சட்ட விதிகளைப் பின்பற்றாமல் மக்கள் நடமாடித் திரிவதே தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது.

எனவே, பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளை அதிகரிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவில் தொடர்ந்து மூன்றாவது நாளாக தினமும் 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆறாவது நாளாக இரண்டு லட்சத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் தினமும் இந்தியாவில் இனங்காணப்பட்டுள்ளனர். (ம-22)

# அடுத்த மூன்று வாரங்கள் மிகமிக முக்கியமானவை

## இராணுவத் தளபதி எச்சரிக்கைத் தொனி

கொழும்பு, ஏப். 21

கொரோனாப் பெருந்தொற்றுத் தொடர்பில், அடுத்த மூன்று வாரங்கள் முக்கியமானவை. புத்தாண்டு விடுமுறைக்குப் பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வேலைக்கு வருபவர்கள் அனைவரும் கொரோனா வைரஸ் பரவாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

முகக்கவசங்களை அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது, பணியிடங்களிலும் பொது இடங்களிலும் முறையான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பது என்பவற்றில் அனைவரும் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரத்தில் பெரும்பான்மையான மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களின் படி நடந்துகொள்வதை நாங்கள் கண்டிருக்கிறோம்.

ஆனால் இவை இல்லாத ஒரு சிறிய குழு இருக்கலாம். கொரோனாவின் இரண்டாவது அலை ஒருவரிடமிருந்து பரவி நாடு முழுவதும் 90 ஆயிரத்துக்கும் அதிகமானோரை பாதிப்புக்குள்ளாக்கியது.

புத்தாண்டின்போது, நாங்கள் பல கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை.

ஆனால், சில தடைகள் விதிக்கப்பட்டன. ஏனெனில் இது அவசியமானது. சிலர் அவற்றைப் பொருட்படுத்தாமல் சுதந்திரத்தை அனுபவிக்க முயன்றனர். நோய் பரவுவதைத் தடுக்க பொது ஒத்துழைப்பு முக்கியமானது - என்றார். (ம)

# அரச நிர்வாகத் திறன் கோத்தாவிடம் இல்லை

## தம்பர அமில தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

அரச நிர்வாகத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொருத்தமற்றவர் என்பதை நாம் பகிரங்கமாகக்குறிப்பிட்டோம். அதனை 69 லட்சம் மக்களும் தற்போது அனுபவ ரீதியில் உணர்ந்திருப்பர்.

இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் உறுப்பினர் தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய தலைமையிலான ஆட்சியை சர்வதேசம் ஏற்கவில்லை. இதனை கடந்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற 46ஆவது கூட்டத்தொடர் ஊடாக அறிந்து கொள்ளலாம். போர்க் காலத்தில் இடம்பெற்றன எனக் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்களை விட, அதிகமான குற்றச்சாட்டுக்கள் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் ஊடாக சுயாதீன ஆணைக் குழுக்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, அரச திணைக்களங்களுக்கு சிவில் சேவைகள் குறித்து எவ்வித மான அனுபவமும் இல்லாத இராணுவ அதிகாரிகள் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டமை, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாதச் செயற்பாடுகள் மற்றும் வெறுக்கத்தக்க பேச்சுக்கள் ஆகியவற்றை அவதானித்து ஜனாதிபதி கோத்தாபய அரச நிர்வாகத்துக்குப் பொருத்தமற்றவர் என்பதை 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் கால பிரசார மேடைகளில் பகிரங்கமாகக் குறிப்பிட்டோம். நாம் குறிப்பிட்டதை நாட்டு மக்கள் ஏற்கவில்லை. அதனை இன்று அனுபவ ரீதியில் புரிந்துக்கொண்டுள்ளனர் - என்றார். (ம-4)

# சு.க. தனிவழி!

## வெளியானது அறிவிப்பு

கொழும்பு, ஏப்.21

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் பங்காளிக்கட்சியான சுதந்திரக்கட்சி தனியாக மே தின நிகழ்வுகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

சுதந்திரக்கட்சியின் விசேட கூட்டமொன்று அந்தக் கட்சியின் தலைமையகத்தில் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது என்று கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு பொதுஜன பெரமுன உள்ளிட்ட கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், பெரமுனவின் கூட்டத்துக்கு சுதந்திரக் கட்சியின் சார்பில் சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா பங்கேற்பார் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

அதேவேளை, மே தின நிகழ்வுகளை தனித்து நடத்தினாலும், அரசை பலவீனப்படுத்துவதற்கு இடமளியோம் என சு.கவின் உப தலைவர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (ந-44)

# முக்கிய கொலை வழக்குகளை விசாரணையின்றி முடிக்கத் திட்டம்

## எதிர்க்கட்சி பகீர் தகவல்

கொழும்பு, ஏப். 21

நாட்டில் இடம்பெற்ற முக்கிய கொலை வழக்குகளை விசாரணை இன்றியே முடிவுக்கு கொண்டு வர அரசு முயற்சி செய்து வருகின்றது என்று எதிர்க்கட்சி பகீர் தகவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய லசந்த விக்ரமதுங்க கொலை, வசிம் தாஜுதீன் கொலை, நடராஜா ரவிராஜ் கொலை, ஜோசப் பரராஜசிங்கம் கொலை, வெலிக்கடை சிறைக் கொலை உள்ளிட்ட குற்ற வழக்குகள் பலவற்றையே விசாரணை செய்யாது நீக்கிக் கொள்ளும் யோசனை ஒன்றை ஆளும் கட்சி நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளது. இவ்வாறு அரசு பல செயற்பாடுகளையும் மறைமுகமாகச் செய்ய முற்படுகிறது என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்சினைகள் கிழக்கில் இல்லையாம்

## ஆளுநர் தெரிவிப்பு



**திருமலை, ஏப்.21**

**கட்சி வேறுபாடுகள் காரணமாக மாகாணத்தில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் சகாப்தம் மாறிவிட்டது என்று தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கிழக்கு மாகாணத்தில் இனப் பிரச்சினைகள் இல்லை என்றும் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இப்போது கிழக்கு மாகாணத்தின் காடுகள் பாதுகாக்கப்படுகின்றன, விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படுகின்றன, தொல்பொருள் இடங்கள் அழகாக இருக்கின்றன, அனைவருக்கும் வலுவான விடயம் என்னவென்றால், கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் வலுவான அமைதியிலும் நல்லிணக்கத்திலும் உள்ளனர். ஆனால் நாம் பொருளாதார ரீதியாகவும் வளமாகவும் சமமாகவும் இருக்க விரும்புகிறோம். மக்களுக்கு எத்தனை பிரச்சினைகள் உள்ளன என்பதை நாம் புரிந்து கொள்வோம். அவர்களுக்கு வேலை மற்றும் பொருளாதார வாய்ப்பு இல்லாததோடு அந்த பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. எங்கள் மாகாணத்தைப் பாது காக்கும் போதும் மாகாணத்தின் செழிப்பைப் பாதுகாத்து வளர்த்துக் கொள்ளும்போது இந்த பிரச்சினை களுக்குத் தீர்வு காணலாம்.

நாங்கள் கலந்துரையாடியவை இந்த ஆண்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படும் என்று நம்புகிறோம். எங்கள் கிழக்குக்கான தனித்துவமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒரு குழுவையும் நியமித்துள் ளோம். கடந்த காலங்களிலும் நியாயமற்ற நிதி ஒதுக்கீட்டை நாங்கள் கண்டிருக்கிறோம். அவற்றையும் தவிர்க்க முயற்சிக்கிறோம். தற்போது எந்தவொரு இன அல்லது கட்சி வேறுபாடுகளோ அல்லது மத வேறுபாடுகளோ இல்லாமல் நிதி ஒதுக்கீடு மிகவும் வெற்றிகரமாக இருந்தது. உண்மையில், எங்கள் மாகாணத்தில் இனப் பிரச்சனைகள் எதுவும் இல்லை. பகிர்வு சிக்கல்கள். அந்தப் பிரச்சினை களைத் தீர்க்க நாம் புரிதலுடன் செயல்பட வேண்டும் என்றார். (ப)

# உறுதியளிக்கப்பட்ட தடுப்பூசி இலங்கைக்கு அனுப்பப்படும்

## சீரம் நிறுவனம் உறுதி

கொழும்பு, ஏப். 21

கொரோனாத் தொற்றுத் தடுப்பூசிக்கு இந்தியாவில் நெருக்கடி உள்ள போதிலும், உறுதியளித்தவாறு, இலங்கைக்குத் தடுப்பூசிகளை அனுப்புவோம் என்று சீரம் நிறுவனம் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கு இந்தியாவால் ஏற்கனவே வழங்கப்பட்ட தடுப்பூசிகளில், 3 இலட்சத்து 50 ஆயிரம் டோஸ் தடுப்பூசிகள் இருப்பில் உள்ளன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் முதல் டோஸ் செலுத்தப்பட்டவர்களுக்கு, இரண்டாம் டோஸ் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியின் தயாரிப்பு நிறுவனமான சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா, இலங்கைக்கு அதிக அளவு தடுப்பூசிகளை தமது நிறுவனம் வழங்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும் தடுப்பூசியை வழங்கும் திகதி குறித்து இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

எவ்வாறிருப்பினும் ஏப்ரல் மாத இறுதிக்குள் அல்லது மே மாதத் தொடக்கத்தில் தடுப்பூசிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப-4)

# வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,ஏப்.21

வீதியில் வேகக் கட்டுப்பாட்டைக் குறைக்கும் தடையை ஏற்படுத்தித் தருமாறு கோரி, நுவரெலியா வெலிமடை வீதியில், ஹக்கலை பூந்தோட்டம் அருகில் பொதுமக்கள், வீதியை மறித்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விபத்தொன்றில், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, வேகக் கட்டுப்பாட்டைக் குறைக்கும் வீதித் தடையை ஏற்படுத்த வேண்டும் என்று பலமுறை மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். அவர்களது கோரிக்கை நிறை வேற்றப்படாத காரணத்தால், மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகளின் அலட்சியம் காரணமாகவே குறித்த பகுதியில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (ப-4)


# மாகாண சபைத் தேர்தல்; தொகுதியில் மூவர் போட்டி

## ஆளும் கட்சி முடிவு

கொழும்பு, ஏப். 21

மாகாண சபைத் தேர்தலில், தொகுதி ரீதியாக, கட்சி ஒன்றிலிருந்து மூவர் போட்டியிடுவதற்கான யோசனை ஆளுங்கட்சியால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் குழுக்கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில், அலரி மாளிகையில் நடைபெற்றது. அதன்போதே, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலகவால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை, நாடாளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள வழிமொழிந்தார். (ப-4)



# டெங்குவை ஒழிக்க உருவாகிறது நுளம்பு

கொழும்பு,ஏப்.21

டெங்கு வைரஸை எதிர்த்துப் போராடக்கூடிய முதல் நுளம்பை கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் குழுவினர் உருவாக்கியுள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரணில் தசநாயக்கவின் வழிகாட்டலில், இரசாயனவியல் இளங்கலை விஞ்ஞானி காளிந்து ரம்யாசோமா, தனது கலாநிதிப் பட்ட ஆராய்ச்சித் திட்டமாக இந்த ஆராய்ச்சியை நடத்தியுள்ளார்.

இந்த ஆராய்ச்சி இன்னும் முதல் மட்டத்திலேயே உள்ளது என்று பேராசிரியர் ரணில் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மரபணுப் பொறிமுறை பெரும்பாலும் பழங்கள், காய்கறிகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டது. விலங்குகளை உருவாக்கவோ அல்லது பரிசோதனை செய்யவோ எந்த மரபணு மாற்றமும் இதுவரை செய்யப்படவில்லை.

எனவே மரபணு மாற்றம் மற்றும் நுளம்பு இனப் பெருக்கம் குறித்து வெளிநாட்டுப் பேராசிரியர்களிடமிருந்து ஆலோசனை பெற வேண்டியிருந்தது.

இலங்கையில் ஒரு விலங்கு குறித்து மேற்கொள்ளப்பட்ட முதல் மரபணு மாற்ற ஆராய்ச்சி இதுவாகும் என்றும அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

# உலக வல்லரசாக சீனா வளர்வது அமெ., இந்தியாவுக்கு பொறாமை

## மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

உலகின் அடுத்த வல்லரசாக சீனா வளர்ந்து வருவது, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு பொறாமை என ஆளும் கட்சிக்கு ஆதரவான மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

உலகின் அடுத்த வல்லரசாக சீனா வளர்ந்து வருவது, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு பொறாமை. இதனாலேயே



அந்த நாடுகள் கொழும்புத் துறைமுகத் திட்டத்தை சீனாவுடன் இணைந்து முன்னெடுப்பதை விரும்பவில்லை.

போர்ட் சிட்டி என்பது சீனா மாத்திரம் முன்னெடுக்கும் திட்டம் அல்ல.

போர்ட் சிட்டி திட்டத்தின் மூலம் இலங்கையின் கலாசாரம், பௌத்தம், ஐக்கியம் என்பவற்றுக்கு பாதிப்பு இல்லை என்றால் அதற்கு எதிர்ப்பு வெளியிடுவதில் அர்த்தம் இல்லை என மகாநாயக்க தேரர்கள் கூறியுள்ளார்கள்.

கொழும்புத் துறைமுக நகரத்தை ஆணைக்குழுவாக மாற்றி அமைக்கும்திட்டம் சிறந்ததொன்று. இந்த ஆணைக்குழுவுக்கு வெளிநாட்டு பிரஜைகள் நியமிக்கப்படும் விடயத்தில் மாற்றம் தேவை - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையாண்மையை பாதிக்கும் சட்டங்களுக்கு இடமளிக்கோம்

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 21**

**நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் எந்தவொரு சட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்ததாவது,

இலங்கை என்பது இறையாண்மைமிக்க சுயாதீன நாடாகும். இங்கு வெளிநாட்டவர்கள் தாம் விரும்பியவாறு செயற்படுவதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கும் வகையிலான சட்டங்கள் உருவாக்கப்படக் கூடாது. அந்த வகையில் அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்ட வரைவு பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. உண்மையில் இது பிறிதொரு நாட்டுக்கான அரசமைப்பாகும். அதன்படி பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் துறைமுகநகரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அந்த ஆணைக்குழு ஜனாதிபதியாலோ அல்லது அந்த விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சராலோ நியமிக்கப்ப டும். எனவே இலங்கையர் அல்லாதோர் அந்த ஆணைக்குழுவின் உறுப் பினர்களாக நியமிக்கப்ப டக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்குரிய கட்டமைப்புக்கு வெளிநாட்டவர்களை நியமிக்கமுடியாதெனின், இந்த விடயத்தில் தீர்மானமெடுக்கும் அதிகாரம் வெளிநாட்டவர்களுக்கு எவ்வாறு வழங்கப்பட முடியும்?

இலங்கையர்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட முடியாது. ஆகவே நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகிய விடயங்களில் இந்த சட்ட வரைவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே நாட்டின் நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைப் பாதுகாப்பது அவசியமாகும் என்றார். (ப-4)

## பாம் எண்ணெய் தடை காரணமாக சிற்றுண்டி உற்பத்தியாளர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 21

அரசால் பாம் எண்ணெய்க்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக சிற்றுண்டி உற்பத்தியாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இலங்கை சிற்றுண்டி உற்பத்தி சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எம்.டி சூரியகுமார இதனைத் தெரிவித்துள்ளார்

அத்துடன் பாம் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் இதுவரையில் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தங்களது உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் அதனை பூர்த்தி செய்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு முடியாமல் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-ப)

## சட்ட வரைவு விவகாரத்தை நீதிமன்றே தீர்மானிக்கும்

### சுசில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பான தீர்மானத்தை உயர் நீதிமன்றமே எடுக்கும் என்று தொலைநோக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இந்தச் சட்ட வரைவை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டுமா அல்லது சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டுமா என்ற தீர்மானத்தை உயர் நீதிமன்று எடுக்கும். அதற்கமைவாக நீதிமன்றின் தீர்மா னத்தை அரசு பொறுப்புடன் செயற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

## பகிரங்க அறிவித்தல்

வலிமேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிற்குள் மேற்கொள்ளப்படும் திரவக்கழிவகற்றல் (Gully Emptier) சேவை தொடர்பானது.

எமது சபையின் நிர்வாக எல்லைக்குள் Gully Emptier மூலம் திரவக்கழிவகற்றல் நிலையத்தினை வைத்திருப்பவர்களும், திரவக் கழிவகற்றல் சேவையை வழங்குபவர்களும் தங்களது சேவை தொடர்பான பதிவுகளை வலிமேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும் 30.04.2021 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த திகதிக்கு பின்னர் பதிவுகளை மேற்கொள்ளாது, சபையின் அனுமதி பெறப்படாமல் திரவக்கழிவகற்றல் சேவையை (சுத்திகரிப்பு சேவை) மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கௌரவ த.நடனேந்திரன்**
**தவிசாளர்**
**வலிமேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
20.04.2021

**ஆடையகத்தில்**

## 7 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 21

மஹரகம, பமுனுகம பகுதியில் உள்ள ஆடை விற்பனையகம் ஒன்றின், 17 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

விற்பனையகத்தில் பணியாற்றும் 46 பேருக்கு பி.சி.ஆர். சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன. அதில் 17 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த விற்பனையகத்தில், சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில், ஆடை கொள்வனவுக்காக அதிகளவு மக்கள் திரண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப-4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி கிருதகௌரி அரங்கண்ணல்**
அவர்களின் அன்பு மாமியார்

**தங்கராசா காமாட்சி**

அவாகள் 16.04.2021 அன்று சிவபதமடைந்தார். அவர்களின் பிரிவுத்துயரால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
**யா/கோப்பாய் மகாவித்தியாலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையின் திட்டமிடல் பிரிவில்
பணியாற்றும் திரு **பா.பிரதீபன் (MSO)**
அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு. முத்தையா பாலசிங்கம்**

17.04.2021 ம் திகதி இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களினை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**துயருறும்**
**நலன்புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம் தெல்லிப்பளை.**

## ஆதன பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 இடுகாட்டு வீதி 31 என்னும் இலக்கத்தைக்கொண்ட ஆதனம் அந்தோனிப்பிள்ளை பெண் தங்கமுத்து என்னும் பெயரில் மாநகர சபை ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் இலக்கம் 31 - 3ஆம் குறுக்குத்தெரு நாவந் துறை என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி ஜெயராஜ் பற்றீ சியா தே.அ.அ. இல 815624157V என்பவர் பிரசித்த நொத்தா ரிஸ் திருமதி ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 2019.06.07 ஆம் திகதி 3713 ஆம் இலக்கத்தில் நிறை வேறிய நன்கொடை உறுதிப்படி தனக்கு சொந்தமானதாக்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை இது யாழ்ப்பாண பிரதேச செயலகப் பகுதியில் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது. J/85 கிராம அலுவலர் பிரிவில் உள்ள "பாராயடி" நிலப்பரப்பு பூச்சியம் குளி பூச்சியம் மூன்று தசம் ஐந்து ஏழு (நில பர 0 குளி 03.57) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.சந்தியாப் பிள்ளை அவர்களால் 1982.04.24 ஆம் திகதி 651/1ஆம் இலக்கத்தில் அளந்த படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு 0 குளி 03.57 ஆகும்.

**எல்லைகள்:**

**கிழக்கு** - 3ஆம் குறுக்குத்தெரு
**வடக்கு** - மரிசல் சிந்தாத்துரையின் ஆதனம்
**மேற்கு** - மரியாம்பிள்ளை செபஸ்ரியின் உரிமைக்காரரின் ஆதனம்
**தெற்கு** - திபுதியன் பெண் மரிய உத்தரியத்தின் ஆதனம். இதடங்கலும்.

தற்போது இவ் ஆதனத்தை ஜெயராஜ் பற்றீசியா என்பவர் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித் துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களூடாக எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனம் ஜெயராஜ் பற்றீசியா என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதன் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மன்னியாதிரும் ஆண்டவரே!

இலங்கையை மட்டுமல்லாது முழு உலகையுமே அதிரவைத்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் நிகழ்ந்து இன்றோடு இரண்டு வருடங்கள். இந்த இரண்டு வருடங்களுக்குள், இலங்கையில் அரசியல் உள்ளிட்ட எல்லாவற்றிலுமே பெரும் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், இன்னமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியும் கிடைக்கவில்லை, தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இரட்டைக்கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்காவில் எப்படி அரசியல், பொருளாதார, இராணுவக் கொள்கைகளின் கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டனவோ, அவ்வாறான மாற்றங்கள் ஈஸ்டர் தாக்குதலோடு இலங்கையிலும் உண்டாயின. குறிப்பாக, இவ்வாறான தாக்குதல்களை எதிர்கொள்ள இராணுவத்தை பலத்தோடும், புலனாய்வுப்பிரிவை விழிப்போடும் வைத்திருக்கக்கூடிய சக்திமிக்க தலைவர் ஒருவரே நாட்டுக்குத் தேவை என்ற எண்ணம் பெரும்பாலான சிங்கள மக்களிடம் மேலெழுந்தது. இதன் விளைவாகவே பகிரங்கமாக இனவாதத்தைக் கக்கும் அமைப்புகள், கட்சிகளின் துணையோடு ஜனாதிபதியானார் கோத்தாபய. ஒரு இரும்பு ஜனாதிபதியின் மூலமே ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க முடியுமெனவும், பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் எனவும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கருதினார். அதனால் இனவாதம் பேசி, கடும்போக்காளராகத் தன்னை நிலைநிறுத்திய கோத்தாபய ஜனாதிபதியாக வரவேண்டுமென்று பேராயர் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்திருந்தார்.

ஆனால், தன்னை பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின் தலைவராக மட்டுமே எண்ணிக் கருமமாற்றும் கோத்தாபய, ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வழங்கவோ, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவோ அக்கறை காட்டவில்லை. இலவு காத்த கிளியான பேராயர், மெல்லமெல்ல தன் ஆதங்கத்தை வெளிப்படையாக முன்வைக்கத் தொடங்கினார். ஒருகட்டத்தில் 'இலங்கை அரசாங்கத்தை நம்பிப் பயனில்லை. இனியும் நீதி தாமதிக்கப்படுமானால் சர்வதேசத்திடம்தான் நீதியைக் கோரவேண்டும்' என்று தன் அதிருப்தியை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார். இத்தனைக்கும் இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கான நீதியை தமிழர்கள் சர்வதேசத்திடம் கோரியபோது, அதனை எதிர்த்தவர்களில் ஒருவர் இதே பேராயர்தான். இப்போது தனக்கு தலையிடியும், காய்ச்சலும் வந்தபோதே பேராயருக்கு நீதியின் பெறுமதி புரிந்திருக்கிறது.

ஈஸ்டர் தாக்குதல் என்பது தனியே சஹ்ரான் கும்பலால் நடத்தப்பட்ட ஒன்றல்ல. உண்மையில் அதன் பின்னணியில் பலமான சக்திகளின் அரூபக் கரங்கள் மறைந்துள்ளன. அரசியல் ஆதாயங்களுக்காகவும், முஸ்லிம்களை ஒடுக்குவதற்காகவுமே இந்த ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்பதே பலரதும் சந்தேகம். அதனை உறுதி செய்வது போலவே விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டன, திசை திருப்பல்கள் மேற்கொள்ளப்பட்டன. குற்றவாளிகளைப் பிடிப்போம் என்று ஆட்சிக்கு வந்தவர்கள் திடீரென அப்படி ஒரு தாக்குதலே நடக்காதது போல ,வேறு பக்கங்களில் தங்கள் பார்வையைத் திருப்பிவிட்டனர். தமிழர்கள் செய்யும் நினைவேந்தல்கள், போராட்டங்கள் என்பவற்றைத் தடுப்பதிலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பேரால் அப்பாவிகளைக் கைது செய்வதிலும் காட்டும் அக்கறையின் ஒரு துளியையாவது, ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளில் காட்டியிருந்தால், எப்போதோ சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்திருக்கலாமே.

ஈஸ்டர் தாக்குதலாக இருந்தாலென்ன, இறுதிப்போராக இருந்தாலென்ன இலங்கையில் பாதிக்கப்பட்டோருக்கான நீதி என்பது கானல்நீர்தான். ஆனாலும் ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்ட அத்தனை உயிர்களுக்கும் நீதி கிடைக்கட்டுமென பிரார்த்திப்போம். குற்றவாளிகளையும், அவர்களுக்கு துணை போவோரையும் மன்னியாதிரும் ஆண்டவரே!



# வடக்கு மாகாண மீனவர்கள் மாற்றாந்தாய் பிள்ளைகளா?

## மன்னார் மீ.கூ.ச.செயலாளர் ஆலம் ஆதங்கம்

**மன்னார், ஏப். 21**



**இலங்கை அரசு, வட பகுதி தமிழ் மீனவர்கள் மீது ஓரவஞ்சனை காட்டி வருகின்றது என்று மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் முகமட் ஆலம் தெரிவித்துள்ளார்.**

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாண மீனவர்கள் தொடர்ச்சியாக தொழில் ரீதியாக புறக்கணிக்கப்பட்டு பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற புரேவிப் புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இன்றுவரை எந்த ஒரு நிவாரண கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. அதற்கான நிவாரணங்கள் வழங்கப்படும் என்று உத்தரவாதங்கள் மட்டுமே வழங்கப்படுகிறதே தவிர நிவாரணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

அதைவிட தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்படும்போது அவர்களை விரைவாக விடுதலை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக மியான்மரில் பிடிபட்ட தென்னிலங்கை மீனவர்கள் தற்போது விடுதலை செய்யப்பட்டு அவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது. அதே வேளை இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட எமது மீனவர்கள் இன்னமும் தமிழக சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை விடுவித்து, அழைத்து வருவதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் எவராலும் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழக சிறைகளில் உள்ள தலைமன்னாரைச் சேர்ந்த மீனவர்களின் வழக்கு நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை இலங்கைக்கு கூட்டிவருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. தலைமன்னார் மீனவர்கள் இலங்கை வருவதாக இருந்தால் இந்திய நாட்டு சட்டப்படி கடவுச் சீட்டு, விசா பெற்று அதனூடாகவே இலங்கைக்குள் வரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் இலங்கையில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இந்தியத்தூதுவரிடம் கையளிக்கப்பட்டு கடல் மார்க்கமாகவே தங்களுடைய நாட்டுக்குச் சென்றுள்ளார்கள். இந்தச் செயல்பாடானது இலங்கை அரசு வடக்கு தமிழ் மீனவர்களை மாற்றாந்தாய் பிள்ளைகள் போல் நடத்துவது அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது - என்றார். (ப-213,56)

# ராஜபக்சக்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கார்

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

நாட்டில் 30 ஆண்டுகள் இடம்பெற்ற போரில், பிரிவினைவாதத்தைத் தோற்கடித்தவர்கள் இன்றைய ஆட்சியின் தலைவர்கள். அத்தகையவர்கள் இருக்கும்போது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் எந்தவொரு முடிவும் எடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு நாட்டின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைச் சிறிதும் பாதிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்காது. நாட்டை பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் முடிவுகளை அரசு எடுக்கும்போது, சக்தி வாய்ந்த நாடுகள் தலைவர்களை மாற்றவும், ஆட்சியை மாற்றவும் நடவடிக்கை எடுக்கின்றன. இலங்கை போன்ற நாடுகள் வளர்ச்சியடைவதை சக்திவாய்ந்த நாடுகள் விரும்பவில்லை என்பதே இதன் அர்த்தம் - என்றார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு துறைமுக சட்ட வரைவு;

## நாடாளுமன்றில் விடுமுறைக் காலத்தில் சமர்ப்பித்தது அரசின் திட்டமிட்ட செயல்

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 21

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவில் காணப்படுகின்ற பாதிப்பான, பாரதூரமான உள்ளடக்கங்கள் நாட்டு மக்களுக்கு வெளிப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே திட்டமிட்டு நீண்ட விடுமுறை காலத்தில் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இதிலிருந்து அரசின் சதித் திட்டம் தெளிவாகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

துறைமுக நகர ஆணைக் குழு தொடர்பான சட்ட வரைவு அவசரமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த வாரம் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில்கூட இது தாடர்பில் அவதானம் செலுத்தப்படவில்லை. இவ்வாறான சட்ட வரைவு சமர்ப்பிக்கப்படும் போது அதனை ஆட்சேபித்து நீதிமன்றத்துக்குச் செல்வதற்கு ஒருவார காலம் காணப்படும்.

எனினும் இந்தச் சட்ட வரைபு விடுமுறை ஆரம்பமாகும் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட வரைபில் காணப்படும் பாரதூரமான விடயங்கள் நாட்டுக்கு வெளிப்படுவதை தடுப்பதற்காக சூட்சுமமாக அரசு செயற்பட்டுள்ளமை இதன் மூலம் தெளிவாகிறது.

இந்தச் சட்ட வரைவில் நிதிச் சலவை சட்ட உறுப்புரையை உள்ளடக்க வேண்டும்.

இதேவேளை தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களின் நிதியைத் தடைசெய்து உறுப்புரையொன்றையும் இதில் உள்ளடக்க வேண்டும்.

அத்தோடு இது தொடர்பில் பரந்தளவிலான பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்தத் துறையுடன் தொடர்புடையவர்களின் ஆலோசனை இன்றி வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது -என்றார். (ப)

# கர்தினால் மல்கம் இரட்டை முகவரா?

### ஞானசார தேரர் சீற்றம்

**கொழும்பு, ஏப். 21**

**அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என மல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை குறிப்பிட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இரட்டை முகவராகச் செயற்படுவதை கர்தினால் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மற்றும் அரசு மீது உள்ள முரண்பாட்டை அவர் தனிப்பட்ட முறையில் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இஸ்லாமிய அடிப்படைவாதம் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ளது. அறவழி மதக் கொள்கைக்கு அப்பாற்பட்டவர்கள் இஸ்லாமிய மத கொள்கையைத் தவறான வகையில் புரிந்துகொண்டு அடிப்படைவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு ஏனைய மதங்கள் மீது வேறு தாக்குதல்களை முன்னெடுக்கிறார்கள். இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் அரச ஆதரவுடன் தலைத்தூக்குகிறது என்பதை ஆரம்ப காலத்தில் இருந்து ஆதாரத்துடன் தெரிவித்தோம். எமது கருத்தை அரச தலைவர்களும், இஸ்லாமிய மதத் தலைவர்களும், இஸ்லாமிய அரசியல் வாதிகளும், ஏனைய மதத் தலைவர்களும் பொருட்படுத்தவில்லை.

இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து நாங்கள் குறிப்பிட்ட கருத்தை முஸ்லிம் அரசியல் வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தி எங்களை இனவாதிகளாக சித்தரித்து அரசியல் இலாபம் தேடிக் கொண்டார்கள்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் எதிர்காலத்தில் தோற்றம் பெறும் பாரதூரமான விளைவுகள் குறித்து எவரும் அக்கறை கொள்ளவில்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ் கொள்கையால் ஈர்ககப்பட்டவர்கள் தாக்குதல்களை முன்னெடுத்தார்கள் என்று மல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை ஆரம்பத்தில் குறிப்பிட்டார். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நாளையுடன் (இன்றுடன்) இரண்டு வருடங்கள் பூர்த்தியாகுகின்றன. இவ்வாறான நிலையில் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் மதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது அல்ல அத் தாக்குதல் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டது என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளமையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜனாதிபதி மற்றும் அரசின் மீது உள்ள பிரச்சினைகளை அவர் தனிப்பட்ட முறையில் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ப)

## சட்ட வரைவு மீதான விவாதம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 21

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பில், நாடாளுமன்ற விவாதத்தை நடத்த வேண்டாம் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

இதில் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு தொடர்பான விவாதத்தை ஒத்தி வைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வழக்கு விசாரணைகள் இடம்பெறவுள்ளதால், விவாதம் வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை அரசியல் பழிவாங்கல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மீதான விவாதம் நடத்துவதற்கு எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த விவாதத்தை இரு நாள்கள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக எதிர்வரும் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு நாள்கள் நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. (ப-4)

## பொலநறுவை-கொழும்பு ரயில் சேவையை மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்

### *நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி வலியுறுத்து*

கொழும்பு, ஏப். 21

பொலநறுவை முதல் கொழும்பு வரை சேவையில் ஈடுபடுத்தப்படும் கடுகதி ரயில் சேவையை மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

'முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசின் காலப்பகுதியில் பொலநறுவை முதல் கொழும்பு வரையிலான கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த ரயில் சேவையானது பொறுநறுவையிலிருந்து அதிகாலை 3 மணிக்கு புறப்பட்டு காலை 9 மணிக்கு கொழும்பை வந்தடைகின்றது.

அதேபோன்று கொழும்பிலிருந்து மாலை 3.15 மணிக்கு புறப்பட்டு 7.15 மணிக்கு பொலநறுவையைச் சென்றடைகின்றது.

அதிகாலை 3 மணிக்கு பொறுநறுவையில் இருந்து குறித்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா என்பதனை ஆராய்ந்து பாருங்கள்.

அதிகமான நேரங்களில் பயணிகளற்ற இருக்கைகளுடனேயே இந்த ரயில் கொழும்பைச் சென்றடைகின்றது. பொலநறுவையில் இருந்து சேவையை ஆரம்பிக்கின்றமை காரணமாகவே குறைந்தளவானோர் பயணிக்கின்றனர்.

எனவே பொலநறுவைக்கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்ததன் பின்னராக, பொறுநறுவையில் இருந்து குறித்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா? ஏனெனில் தற்போது மட்க்களப்பிலிருந்து கொழும்புக்கு வரும் ரயிலில் பயணிப்போர் இரண்டு நாள்களாவது கொழும்பில் தங்கியிருந்து தங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

எனினும் காலை 9 மணிக்கு கொழும்புக்கு வந்தால், தங்களது கடமைகளைப் பூர்த்தி செய்துகொண்டதன் பின்னர் மீண்டும் அன்றைய தினம் மாலையே மட்டக்களப்புக்குத் திரும்பிச் செல்ல முடியும் என்றார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர், அதிகாரிகளுடன் பேசிவிட்டு உரிய பதிலை வழங்குகிறேன் எனத் தெரிவித்தார். (ப)

## கறுப்புப்பண வர்த்தகர்கள் இலங்கைக்குள் நுழைவர்

**முன்னிலை சோஷலிசக் கட்சி எச்சரிக்கை**

கொழும்பு, ஏப். 21

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால், இலங்கைக்குள் கறுப்புப்பணத்தை அடிப்படையாகக்கொண்ட வர்த்தகர்கள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும் இவ்வாறு முன்னிலை சோஷலிசக் கட்சி எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் புபுது ஜாகொட தெரிவிக்கையில்,

கறுப்புப்பண சுத்திகரிப்பு வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர்.

இந்த நிலையில், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால் இத்தகைய வர்த்தகர்களின் தளமாக துறைமுக நகரம் மாற்றப்படும். இதனால் இலங்கையின் பொருளாதாரம் கறுப்புப் பொருளாதாரமாகவே கருதப்படும்.

இந்தச் சட்ட வரைவு ஊடாக இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையில் காணப்படும் அதிகாரப் போட்டி மேலும் உக்கிரமடையும். அதன் காரணமாக நாட்டு மக்கள் பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

சீனாவின் ஆதிக்கம் நாட்டுக்குள் அதிகரிக்கும். இதனால் எமது நாட்டுத் தொழிலாளர்களுக்குக் காணப்படும் உரிமைகள் இரத்துச் செய்யப்படவும் வாய்ப்புள்ளது -என்றார். (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்.21 தாக்குதல் பின்னணி

# தீவிரவாதப் பயிற்சி பெற்ற பலர் இன்னமும் நடமாட்டம்

## அருட்தந்தை சிறில் காமினி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 21**

**ஏப்ரல் 21 நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில், வன்முறை, தீவிரவாதச் செயற்பாடுகளில் முழுமையான பயிற்சிகளைப் பலர் பெற்றுள்ளனர். இவர்களில் ஒரு சிலர் மாத்திரமே இதுவரையில் உயிரிழந்திருக்கக் கூடும். எஞ்சியோர் நாட்டின் பல பகுதிகளிலும் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். இவ்வாறு அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.**


பொரளையிலுள்ள பேராயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தௌஹித் ஜமாஅத் உள்ளிட்ட 15 அடிப்படைவாத அமைப்புக்களில் சுமார் 350 இஸ்லாமிய இளைஞர், யுவதிகள் அடிப்படைவாத, வன்முறைகளில் ஈடுபடுவதற்கான பயிற்சிகளைப் பெற்றுள்ளனர் என்று உயிர்த்த ஞாயிறு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையில், இதுவரையில் வெளியாகியுள்ள தகவல்களின் அடிப்படையில் சஹ்ரான் என்பவரால் தௌஹித் ஜமாஅத் அமைப்பு ஊடாக அடிப்படைவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. நாடளாவிய ரீதியில் 350 இஸ்லாம் இளைஞர், யுவதிகள் இதில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். 350 இளைஞர், யுவதிகள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு குழுவினர் தற்கொலைக் குண்டுதாரிகளாகவும், ஏனையோர் ஆயுதமேந்திப் போராடுபவர்களாகவும் உள்ளனர்.

இவர்கள் அடிப்படைவாதம், வன்முறை, தீவிரவாதச் செயற்பாடுகளில் முழுமையான பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். இவர்களில் இதுவரையில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்? இவை அனைத்தும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கூறப்பட்டுள்ள விடயங்களாகும். எனவே நாடு தற்போது பாதுகாப்பற்ற நிலையிலேயே உள்ளது. -என்றார். (ப-4)



# மே மாதம் முதல் 2 ஆம் கட்ட தடுப்பூசி

கொழும்பு, ஏப். 21

கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, 'புத்தாண்டுக்குப் பிறகு ஏப்ரல் 23ஆம் திகதி முதல் அஸ்ராஜெனகா தடுப்பூசியின் இரண்டாம் கட்டம் ஏற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. தற்போது மே முதலாம் திகதி முதல் வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டு 12 வாரங்களுக்குள் இரண்டாம் கட்டத்தையும் வழங்க வேண்டும் என உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது 12 வாரங்கள் முடிவடைந்துவிட்டன. இதன் உண்மைத்தன்மை என்ன, எப்போது 2ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றப்படும்? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி, 'அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஜனவரி 29ஆம் திகதி ஏற்றப்பட்டது. ஏப்ரல் 29ஆம் திகதியே 2 ஆம் கட்ட ஊசியை ஏற்றப்பட வேண்டும். அந்த வகையில் மே முதலாம் திகதி முதல் ஏற்றப்படும். ஒரிரு நாள்கள் தாமதம் பிரச்சினையாக அமையாது.' -என்றார். (ந-44)

# இலங்கைப் படகில் 340 கிலோ ஹெரோய்ன்

கொழும்பு, ஏப். 21

இந்தியாவின் கொச்சிக் கடற்பரப்பில் இலங்கைப் படகொன்றிலிருந்து சுமார் 340 கிலோ ஹெரோய்ன், இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகத்தினரால் மீட்கப்பட்டுள்ளது. இதன்போது இலங்கையைச் சேர்ந்த 5 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக் கட்ட விசாரணைகளில் ஈரானிய படகிலிருந்து, ஹெரோய்ன் கைமாற்றப்பட்டுள்ளது என்று தெரிய வந்துள்ளது. படகிலிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சர்வதேச சந்தையில் ஆயிரத்து 750 கோடி இந்திய ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ப-4)

# மயக்கமடைந்த நோயாளி விவகாரம் மருத்துவருக்கு உடனடி இடமாற்றம்!

குருதியில் சர்க்கரை அளவு குறைவாக இருந்ததால் மயக்கமடைந்த நோயாளி இறந்து விட்டார் என்று தெரிவித்து, அவரை பிரேத அறைக்கு அனுப்பிய மருத்துவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. நீர்கொழும்பு மருத்துவமனையின் மருத்துவரே தற்காலிகமாக புத்தளம் பொது மருத்துவமனைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார் என்று மருத்துவ சேவைகள் துணைப் பணிப்பாளர் லால் பனாபிட்டிய தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து நீர்கொழும்பு மருத்துவமனையால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை கடந்த வாரம் சுகாதார அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி, மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது அமைச்சின் பொறுப்பாகும் என்று நீர்கொழும்பு மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் நிர்மலா லோகநாதன் தெரிவித்தார். (ப)

# மத்தள விமான நிலையத்தில் வியாபார கட்டடம்

கொழும்பு, ஏப். 21

மத்தளை சர்வதேச விமான நிலைய வளாகத்துக்குள், புதிய வர்த்தக கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அத்துடன் வர்த்தக விமானங்களை ஈர்ப்பதற்காக மேலுமொரு புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொருள்கள் பரிமாற்றத்தை இலகுவாக்க விமான சரக்கு முனையத்தின் வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ப-4)

# 119 க்கு பொய்யான தகவல்; பொலிஸாரால் பெண் கைது

பொலிஸ் அவசர சேவை இலக்கமான 119க்கு தவறான அழைப்பை மேற்கொண்ட 25 வயதுடைய இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்ட தங்கொட்டுவ பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொய்யான தகவல் கூறியுள்ளார்.

இதையடுத்து தங்கொட்டுவ பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது மூத்த சகோதரியின் தொலைபேசியைப் பயன்படுத்தியே இந்த போலித் தகவலை வழங்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ-இ)

# ஊக்கப் பதார்த்தங்களின் பட்டியல் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஏப். 21

தடை செய்யப்பட்டுள்ள ஊக்க மருந்துகள் உள்ளடங்கிய ஊக்கப் பதார்த்தங்களின் பட்டியல், நாடாளுமன்றின் அனுமதிக்காக இன்று சமர்ப்பிக்கப்படும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் உலக ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம் பல்வேறு விளையாட்டுக்களுக்காகத் தடைசெய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் அடங்கிய பட்டியலை வெளியிட்டு வருகின்றது.

விளையாட்டு வீரர்கள் தெரிந்தோ அல்லது தெரியாமலோ தமது வினைத்திறனை அதிகரிப்பதற்காக, இந்த ஊக்கப் பதார்த்தங்களைப் பயன்படுத்தியிருந்தால், குறித்த போட்டியில் பங்கேற்பதைத் தடுப்பதற்கும் அல்லது வேறு நடவடிக்கைகளை எடுக்கவும் முடியும்.

அதற்கமைவாக இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல், இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களின் பட்டியல், நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் ஆண்டுகள் வரிசையில் இந்த ஆண்டு 'பிலவ' வருடமாகத் தொடங்குகிறது. அதன்படி இன்று மகரராசியின் பலன்களைப் பார்ப்போம்.**

பிலவ வருட

# தமிழ்ப் புத்தாண்டு ராசி பலன்கள்




எதைச்செய்தாலும் அதில் உண்மையும் நேர்மையும் இருக்கிறதா என்று ஆராய்ந்து மனச்சாட்சிக்கு பயந்து நடந்துகொள்ளும் மகர ராசிக்காரர்களே... தன்மானத்தையும் மரியாதையையும் விட்டுக்கொடுக்காத உங்களுக்கு இந்தப் பிலவப் புத்தாண்டு எப்படிப்பட்ட பலன்களைத் தரப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

ராசிக்கு 4 ம் வீட்டில் இந்தப் பிலவப் புத்தாண்டு பிறப்பதால் நன்மை அதிக அளவில் நடைபெறும்.

பிரச்சினைகள் அதிகரித்து செயல்பட முடியா மல் தவித்தீர்களே... அந்த நிலைமை மாறும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். அதே வேளை தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும் நல்லது. கோபம் விலகும். மனதில் அமைதி பிறக்கும். பல வழிகளிலும் பணம் வந்து உங்களை உற்சாகப்படுத்தும். ஆனால் செலவுகளும் வரிசை கட்டும். பழைய நிகழ்வுகளை எண்ணி வருத்தப்படுவதை விட்டுவிடுங்கள். திடீர்ப் பயணங்களும் அதனால் செலவுகளும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

பிள்ளைகள் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். பையனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பெண்ணுக்கு தடைப்பட்டிருந்த கல்யாணப் பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் தரும். சித்திரை, ஆனி, ஆவணி மாதங்களில் சிறப்பாக கல்யாணத்தை முடிப்பீர்கள். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். அலைச்சல், செலவுகள் வந்தாலும் சமாளித்து விடுவீர்கள். ஆடி மாதம் மட்டும் செயல்களில் கூடுதல் கவனம் தேவை.

புரட்டாசி மாதத்தில் இருந்து மகிழ்ச்சி தங்கும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் உண்டாகும். வழக்குகளில் நிதானம் தேவை. மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். பழகியவர்களுக்குக் கூட பிணைக் கையெழுத்திட வேண்டாம்.

**குருபகவான் சஞ்சாரம் எப்படி?**

14.4.2021 முதல் 13.9.2021 வரை மற்றும் 13.11.2021 முதல் குருபகவான் உங்கள் ராசியை விட்டு விலகி வருடம் முடியும் வரை 2 ம் வீட்டிலேயே அமர்வதால் குடும்பத்தில் நிலவி வந்த கூச்சல், குழப்பங்கள் விலகும். கணவன் மனைவிக்குள் கலகத்தை ஏற்படுத்திய வர்களை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள்.

பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரமையிலிருந்து விடுபடுவீர்கள். மருந்து மாத்திரைகளிலிருந்து விடுதலை கிடைக்கும்.

படித்து, பட்டம் வாங்கியும் கல்வித் தகுதிக்கேற்ப நல்ல வேலையில்லாமல் திண்டாடினீர்களே! புது வேலை அமையும். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும்.

அதேவேளை, 14.9.2021 முதல் 12.11. 2021 வரை குரு உங்கள் ராசிக்குள்ளே அமர்ந்து ஜன்ம குருவாக இருப்பதால் பழைய பிரச்சினைகள் தலை தூக்கும். மஞ்சள் காமாலை, காய்ச்சல், காது வலி வரக்கூடும். சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைக் குடிப்பது நல்லது. சிலர் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள்.

**ராகு கேது இந்த ஆண்டு சாதகமா பாதகமா?**

20.3.2022 வரை கேது 11 ம் வீட்டில் நிற்பதால் பங்கு பரி வர்த்தனை மூலம் பணம் வரும். தயக்கம் தடுமாற்றம் நீங்கும். ஆன்மிகச் சான்றோர்கள் அறிமுகமாவார்கள். கடந்த வருடத்தில் வாட்டிவதைத்த பிரச்சினைகளுக்கெல்லாம் இப்பொழுது தீர்வு கிடைக்கும். குடும்பத்தாருடன் எதற்கெடுத்தாலும் சண்டை சச்சரவு என்றே இதுவரை நாள்கள் நகர்ந்ததே. இனி பாசம் அதிகரிக்கும். கணவன் மனை விக்குள் அந்நியோன்யம் பிறக்கும்.

21.3.2022 முதல் வருடம் முடியும் வரை 4ல் ராகு நுழைவதால் வேலைச்சுமை வாட்டியெடுக்கும். தாயாருடன் மனஸ்தாபங்கள் வெடிக்கும். வாகனம் தண்டச்செலவு வைக்கும். கேது 10ம் வீட்டிற்குள் வருவதால் உத்தியோகத்தில் எதிர்ப்புகள், திடீர் இடமாற்றம், வேலைச்சுமை, அதிருப்தி வந்து நீங்கும்.

## சிந்தனையில் தெளிவும் செயலில் வேகமும் தரும் பிலவ வருடம்...



**சனி இந்த ஆண்டு என்ன பலன்கள் தருவார்?**

ஆண்டு முழுக்க சனிபகவான் ராசியிலேயே ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால் எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வீடு வாங்குவீர்கள். சிலர் புது மனை புகுவீர்கள். என்றாலும் ஜன்ம சனியாகத் தொடர்வதால் உடல் நலனில் அதிக அக்கறை தேவை. வாயுப் பதார்த்தங்கள், அசைவ, கார உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. செரிமானக் கோளாறு, வயிறு உப்புதல், அசதி, சோர்வு வந்து செல்லும். வழக்கை நினைத்துக் கவலையடைவீர்கள். தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களுடன் பழகிக் கொண்டிருக்காதீர்கள்.

**இந்த வருடம் உங்களைத் தெளிவு படுத்துவதுடன், இழுபறியாக இருந்த வேலைகளை வெற்றிகரமாக முடித்துத் தருவதாக அமையும்.**

## இன்றைய நாள்

**மேடம்:** உபயோகமற்ற விஷயங்களை நினைக்காமல் விலக்குவது நல்லது. மனச்சாட்சிப்படி நடப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். நிம்மதியான நாள். எதையும் ஆராயாமல் ஏற்க வேண்டாம்.

**இடபம்:** யோகமான நாள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். நிதிநிலை உயர்வதற்காக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் புதிய பொருள் சேர்வதற்கான முயற்சி எடுப்பீர்கள்.

**மிதுனம்:** பகையொன்று நட்பாகும். குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பின்விளைவுகளை அறிந்து செயற்படுவது நல்லது. மகிழ்ச்சியான நாள்.

**கடகம்:** நல்லவர்களைப் பகைத்துக் கொள்வது தப்பு என்பதை உணர்வீர்கள் எண்ணிய விஷயங்கள் சிறப்பாக நடைபெறும். பொறுப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் உள்ள ஒருவரின் மதிப்பு உயரும். நெருக்கமானவர்களின் தேவைகள் தெரிய வரும். பிறருக்கு உதவுவீர்கள்.

**கன்னி:** பெண்களுக்குக் குதூகலம் அளிக்கும் விஷயம் ஒன்று நடக்கும். சகோதரர்களால் உதவி கிடைக்கும். மனதுக்கு நெருக்கமானவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**துலாம்:** விரதம், வழிபாடுகளில் ஈடுபாடு கூடும். சிறப்பான விருது வரும். பரபரப்பான நாள். உறவினருடன் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். போட்டி, பந்தயங்களில் அதிர்ஷ்டம் அடிக்கும்.

**விருச்சிகம் :** பணியாளர்கள் புது உத்வேகத்துடன் செயற்பட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள். உடல் நலத்தில் கவனம் செலுத்துவீர்கள் என்பதால் நலமடைவீர்கள். விரும்பிய விஷயம் நடைபெறும்.

**தனுசு:** திட்டமிட்டபடி சில பொருட்களை வாங்குவீர்கள். மனதில் நிம்மதி கூடும். வெற்றி பெறும் எண்ணத்தில் தவறான வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டாம்.

**மகரம்:** பெண்கஞுக்குச் சந்தோஷமான அனுபவங்கள் இன்று ஏற்படும். தள்ளிப்போட்ட விஷயங்களை முடிக்கும் நாள். நட்பு வட்டம் விரியும். வெளிநாட்டிலிருந்து பணிக்கு அழைப்பு வரும்.

**கும்பம்:** உங்கள் முயற்சி காரணமாக இன்று அலுவலகப் பிரச்னைகள் தீரும். சுற்றியிருப்பவர்கள் உங்களைக் குழப்புவதற்கு அனுமதிக்க வேண்டாம்.

**மீனம்:** :பழைய சம்பவங்களை அசைபோடும்படியான நபர்களைச் சந்திப்பீர்கள். உங்களின் சுய திறமைகள் வெளிப்படுவதால் வெற்றியும் பாராட்டும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. சாந்தசோலை பகுதியில் இராணுவம் சுற்றிவளைப்பு!

வவுனியா, ஏப். 21

**மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தை தேடி வவுனியா சாந்தசோலை பகுதியில் இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்பை நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர்.**



மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனம் ஒன்று கடந்த 17ஆம் திகதி ஓமந்தை சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினரை மோதிக் காயப்படுத்தியதுடன், அதன் சாரதியும் தப்பிச்சென்றிருந்தார்.

தப்பிச்சென்ற சாரதி சாந்தசோலை பகுதியில் தங்கியிருக்கிறார் என சிறப்பு அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் மதியம் சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் சாந்தசோலைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், கிராமத்தின் சில பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கும் தடை விதித்தனர். (ஐ-110)

## 'இங்குபேட்டர்' இயந்திரத்தை ஆரம்பித்து வைத்தார் ஆளுநர்

அச்சுவேலி, ஏப். 21

அச்சுவேலி கோழி பண்ணையில் 15 ஆயிரம் முட்டைகளை ஒரே நேரத்தில் பொரிக்க வைக்கும் 'இங்குபேட்டர்' இயந்திரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டு இயந்திரத்தின் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் விவசாயத் துறை சார் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-20)



## 'வாழ்க்கைக்கான தோட்டம்' தென்மராட்சியில் ஆரம்பம்

கொடிகாமம், ஏப். 21

கமத்தொழில் அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் 'வாழ்க்கைக்கான தோட்டம்' எனும் தேசிய வேலைத்திட்டம் கடந்த சனிக்கிழமை தென்மராட்சி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

மந்துவில் வடக்கு கமக்கார அமைப்பின் தலைவர் நாகராசா தலைமையில் மந்துவில் கேலத்து அம்மன் ஆலயத்தில் இந்த செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரின் இணைப்பாளரான தி.தங்கவேலு மற்றும் கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு முருங்கை மரக் கன்றுகளை பயனாளிகளுக்கு வழங்கினர். (ஐ-159)

## கழிவு முகாமைத்துவம்; விழிப்புணர்வுச் செயலமர்வு

சாவகச்சேரி ஏப். 21

வேர்ள்ட் விஷன் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் ஐந்து உள்ளூராட்சி சபைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த உள்ளூராட்சி சபைகளில் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நாளைமறு தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் திண்ணை ஹொட்டலில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை, வட மராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை பருத்தித்துறை நகரசபை மற்றும் வலி.கிழக்கு பிரதேச சபை ஆகியவை இந்தச் செயற்றிட்டத்தில் பங்கெடுக்கத் தெரிவு செய்யப்பட்டன.

குறித்த செயலமர்வில் சபைகளின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், செயலாளர்கள், சுகாதாரக்குழுவின் தலைவர்கள், மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விடயத்துக்கு பொறுப்பான அலுவலர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## சாவகச்சேரியில் 15 பேருக்கு பி.சி.ஆர்.

### எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, ஏப். 21

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றிய 15 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள் கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்ட நிலையில், புதுவருடத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரப் பகுதியில் பெருமளவு மக்கள் புதுவருட கொண்டாட்டத்துக்கான கொள்வனவில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நகரப் பகுதியில் உள்ள புடவை வியாபாரிகள் மற்றும் அங்காடி வியாபாரிகளுக்கு எழுமாற்று கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனையில் கலந்து கொண்ட 15 பேரில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்கள் மற்றும் அங்காடி வியாபாரிகளுக்கு எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை நாளை வியாழக்கிழமை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# அங்கீகரிக்கப்படாத சீனத் தடுப்பூசி இலங்கை மக்களுக்கு வேண்டாம்

### சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 21

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத சீனத் தடுப்பூசியை அரசு இலங்கை மக்களுக்கு வழங்க முயற்சிக்கிறதா? என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றன. குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட மக்களுக்கே தற்போது அதிகமாக தடுப்பூசி செலுத்தப்பட்டது. இவ்வாறான நிலையில், உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத சீனத் தடுப்பூசியை எங்கள் தலையில் கட்டப் பார்க்கின்றீர்களா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால், அது சீனத் தடுப்பூசியாக இருந்தாலும் எந்த தடுப்பூசியாக இருந்தாலும் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்காத எந்த விடயத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

உலக சுகாதார நிறுவனம் 20 லட்சம் தடுப்பூசிகளை வழங்க முன்வந்துள்ளது. எனவே அனைவருக்கும் தடுப்பூசியை செலுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். சிறிய தொற்று வந்தபோது முழு நாட்டையும் முடக்கிய



அரசு தற்போது என்ன செய்து கொண்டு இருக்கின்றது? எனவே உடனடியாக அரசு சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களின் உயிர்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தடுப்பூசியைச் செலுத்தும் திட்டத்தை விரைவாகச் செயற்படுத்த வேண்டும். ஏழை மக்களுக்கு இலவசமாகச் செய்யுங்கள், குறைந்த விலையில் தடுப்பூசிகளை வழங்கினாலும் பெரும்பாலான மக்கள் அதனைப் பெற்றுக்கொள்வார்கள் என்றார். (ப)

## சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

மன்னார், ஏப். 21

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான மூவரை விளக்கமறியல் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் இலுப்பக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பி ஆறு பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்றில் மறைத்துக் கொண்டுசெல்லப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான 89 கிலோ 355 கிராம் கஞ்சாவுடன் வவுனியா தவசிக்குளம் பகுதியைச் சார்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரையும் மன்னார் பொலிஸார், மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 21ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-60)

## மறவன்புலோ வீதி சீரமைக்கப்பட்டது

கொடிகாமம், ஏப். 21

மறவன்புலோ மிலிட்டரி இணைப்பு வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது என மக்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, கடந்த சனிக்கிழமை கிரவல் போடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் 16ஆம் வட்டார உறுப்பினர் அ.நிமலரோகனின் 2020ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் இந்த வீதி செப்பனிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்டர் தாக்குதலில்

# இறந்தோரை அஞ்சலிக்க குடாநாட்டிலும் ஏற்பாடு



**யாழ்ப்பாணம், ஏப். 21**

**ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் மரியன்னை ஆலயத்தில் இடம்பெறவுள்ளது என்று யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையின் கிழக்கு மற்றும் தென் பகுதியில் பல இடங்களில் நடைபெற்ற தொடர் குண்டுத் தாக்குதலில் மரணமடைந்த மக்களுக்கான இரண்டாவது ஆண்டு அஞ்சலி நிகழ்வு இன்று புதன்கிழமை 21ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் குருமுதல்வர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம், கட்டுவப்பிட்டி செபஸ்தியார் ஆலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மற்றும் கொழும்பில் இருக்கின்ற உல்லாச விடுதிகள் போன்றவற்றில் இடம்பெற்ற பயங்கரமான குண்டு வெடிப்பிலே நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். பலர் அங்கவீனமானார்கள், பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இந்தப் பேரவலத்தின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை நாடு முழுவதும் கடைப்பிடித்து இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்று கொழும்பு உயர் மறைமாவட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்திருக்கின்றார். இதன்படி இன்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், கட்டுவாப்பிட்டிய செபஸ்தியர் ஆலயத்திலும், நினைவு அஞ்சலிகளும் ஆராதனைகளும் திருப்பலிகளும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

ஏனைய மாவட்டங்களிலும் இந்த நினைவு நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன. எங்களுடைய யாழ். மறைமாவட்டத்திலே உள்ள ஆலயங்களிலே காலை 8:45 க்கு ஆலயமணி ஒலிக்க விடப்பட்டு, மௌன அஞ்சலிகள் இடம்பெற்று, தீபங்கள் ஏற்றப்பட்டு, சிறப்பு ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாணம் மரியன்னை ஆலயத்தில் காலை 8.45 மணி அளவில் இந்த விசேட ஆராதனைகள் இடம்பெறுகின்றன. எனவே அந்த பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம் - என்றார். (ப)

## சிறப்பு சொற்பொழிவு

புத்தூர், ஏப். 21

புத்தூர் கிழக்கு அருள்மிகு தேரம்பிள்ளையார் சித்தி விநாயகர் திருக்கோவில் வருடாந்த தேர் உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆலயப் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் 'விநாயகரின் திருப்பெரும் வடிவம்' எனும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ச)

## மகோற்சவம்

கொடிகாமம், ஏப். 21

மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச் சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலய மகோற்சவ நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## கிளி. பஸ் நிலையப் பணிகளை விரைவுபடுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 21

கிளிநொச்சியில் விரைவாக நிறைவேறாத திட்டமாக கிளிநொச்சி பஸ் நிலையம் அமைக்கும் பணி காணப்படுகின்றது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'கடந்த பத்தாண்டுகளாக கிளிநொச்சிக்கு புதிய பஸ் நிலையம் வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. எனினும் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக புதிய பஸ் நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மந்த கதியிலேயே மேற்படி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. பஸ் நிலைய வேலைகள் நிறைவேறாததன் காரணமாக நூற்றுக்கணக்கான பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே இது தொடர்பில் கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழு மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் விரைவான நடவடிக்கை எடுத்து, கிளிநொச்சி நகரத்தின் பஸ் நிலையத்தை விரைவாக அமைத்து முடிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்' என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-13)

## தண்ணீரூற்றில் விபத்து: யாசகர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஏப். 21

முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த யாசகர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 38 வயதுடைய சிவராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். இவர் முள்ளியவளை தண்ணீரூற்று மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் யாசகம் பெற்று சீவனம் நடத்தி வந்துள்ளார்.

தண்ணீரூற்று பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றின் போது காயமடைந்த இவர், வீதியில் விழுந்து கிடந்துள்ளார். உடனடியாக அவசர நோயாளர் காவு வண்டிமூலம் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-19)



## பொருண்மியம் நலிந்தோருக்கு உணவுப்பொருள்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஏப். 21

முல்லைத்தீவு, விசுவமடு பிரதேசத்தில் தனிமையில் இருக்கும் வயோதிபர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 15 பேருக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் அமரர் சி.நா. குணரெத்தினம் நினைவாக அவரது பிள்ளைகளின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-222)



நீண்ட காலமாக சுத்தம் செய்யப்படாத நிலையில் இருந்த மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தின் குடிதண்ணீர்க் கிணறு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாடசாலை ஆசிரியர் மற்றும் மாணவர்களால் சிரமதான மூலம் இறைத்து சுத்தம் செய்யப்பட்டது. (ச-159)

## பாடசாலை சப்பாத்து வவுச்சர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

### வர்த்தகர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

அரசாங்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சப்பாத்து வவுச்சர்களுக்குரிய கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை என வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் சப்பாத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, அரசால் மாணவர்களுக்கு சப்பாத்து வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன. குறித்த வவுச்சர்களை வர்த்தக நிலையங்களில் கொடுத்து அவர்கள் சப்பாத்தைக் கொள்வனவு செய்ய முடியும். அத்துடன் வர்த்தகர்கள் குறித்த வவுச்சர்களை வங்கியில் வைப்புச் செய்து பணத்தைப் பெறலாம்.

இந்த நிலையில் மாணவர்களுக்கு இம்முறையும் சப்பாத்து வவுச்சர்கள் வழங்கப்பட்டு மாணவர்கள் வர்த்தக நிலையங்களில் சப்பாத்துக்களைப் பெற்றுக்கொண்டுள்ள போதும், குறித்த வவுச்சர்களுக்குரிய பணம் வர்த்தகர்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனாத் தொற்று காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ள நிலையிலும் மாணவர்களுக்கு சப்பாத்துகளை வழங்குவதற்காக தாம் கடன்பெற்று பெருமளவிலான சப்பாத்துக்களை இறக்குமதி செய்து வழங்கியுள்ள போதும் அதற்கான பணம் வழங்கப்படாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம் என வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் திருமதி சர்வானந்தசிவம் மீனாவதி

**நயினாதீவு / வல்வெட்டித்துறை**



**மண்ணில்**
**16.06.1962**

**விண்ணில்**
**22.03.2021**

வாழ்க்கைத் துணைதானே இல்வாழ்வின் வழிகாட்டி
வந்தாரை வரவேற்று வாஞ்சையோடு உபசரித்து
வாயதிலே இன் சொல்லும் வற்றாத நற்பண்பும்
இல்லறத்தை நல்லறமாய் இனிதாக்கி நின்றவரே.

இல்லற வாழ்வுதனில் இனிமையுடன் வாழ்ந்து நின்று
நல்லறம் காப்பாய் என நாமிருந்தோம் எந்நாளும்
எண்ணமெலாம் கனவாச்சு ஏன் பிறந்தோம் என்றாச்சு
மின்னலைப் போல் ஏன் மறைந்திட்டாய் மீனாவதி அம்மாவே.

குடும்பத்தைக் காக்க வந்த குல விளக்கே ஏன் அணைந்தாய்
கடும்துன்பம் வந்தாலும் கலங்காது உன் மன வலிமை
கொடுங்காலன் உனை அணுகி குறைத்திட்டான் உன் பலத்தை
படும் பாட்டை அறியாயோ நாம் பரிதவித்து நிற்கின்றோம்

ஜீரணிக்க முடியவில்லை உன் ஜீவன் பிரிந்ததையே
நாம் நினைந்து பார்க்கவில்லை நம் உறவு முடியுமென்று
காலங்கள் மாறும் என்றாய் கவலைகளும் தீருமென்றாய்
காலங்கள் மாறவில்லை கவலைகளும் தீரவில்லை

உன் முகத்தை பார்த்து நின்று உறவாடி மகிழ்ந்த எம்மை
உன் படத்தைப் பார்க்க வைத்து உன் உறவை ஏன் முறித்தாய்
கண்ணெதிரே நிற்கின்றாய் காலமெல்லாம் நாம் மறவோம்
கண்கலங்கி எம் கண்ணீரை காணிக்கையாக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

கடந்த (22.03.2021) திங்கட்கிழமை அன்று இறைவன் திருவடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி சர்வானந்தசிவம் மீனாவதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.04.2021) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊரணி அந்தி யேட்டி மண்டபத்திலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடை பெற உள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையி லும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும். தொலைபேசி வாயிலாகவும். தந்தி மூலமும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உம் பிரிவால் துயருறும்**
**கணவர்**
**சர்வானந்த சிவம்**

**சிவசக்தி இல்லம்**
**சிவபுரவீதி, வல்வெட்டித்துறை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PEOPLE'S BANK

# தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2020 வரையும் அடகு வைத்து மீட்கப் படாத நகைகள் - 22.05.2021 (சனிக்கிழமை), 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு **மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில்** வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ் ஸ்ரான்லி வீதி | கொக்குவில் | 21.05.2021 | 22.05.2021 (சனிக்கிழமை) 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
| | மானிப்பாய் | | |
| தெல்லிப்பளை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | -- | | |
| நெல்லியடி | -- | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | -- | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொ.பே.இல. : 021-222 2601/021-222 8602
தொலை நகல் : 021-222 2602
ஈ-மெயில் : jafrho@peoplesbank.lk

# கண்ணீர் அஞ்சலி



நேற்றுமுன்தினம் (19.04.2021) திங்கட்கிழமை
நல்லைக் கந்தன் திருவடியை அடைந்த


## இரட்ணசபாபதி சிவசண்முகநாதன்
**(சிவா அண்ணா)**

அவர்களுக்கு ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதோடு நல்லைக் கந்தன் பொற்பாதக் கமலங்களில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் ***சிவா அண்ணாவின்*** அன்பு உள்ளங்கள்

**நண்பர்கள்:**
**கஜன், கிரி, பொபி, தூயவன், செந்தில்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 . 05 . 1947



உதிர்வு 21 . 03 . 2021

அமரர்

## சின்னப்பு தர்மகுலசிங்கம் (பப்பா)

கடந்த 21.03.2021 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.04.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**பளை நகரம்,**
**பளை.**

**குடும்பத்தினர்**

# வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

மண்ணில் 10 . 06 . 1982



விண்ணில் 08 . 03 . 2021

## அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா பகீரதன்

*(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம் கிளை)*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.04.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் மற்றும் வெளிநாட்டில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் தொலைபேசி மூலமாகவும், பதாகைகள், மலர் வளையங்கள் மூலமாகவும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போது கொரோனா தொற்றினால் நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

**[illegible] கோயில் வீதி,**
**நல்லூர்.**

**குடும்பத்தினர்**
**021 221 2959**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்
மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்"



## முல்லைத்தீவில் கலைஞர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு உடையார்கட்டு குரவில் பகுதியில் அமைந்துள்ள முல்லை ஸ்டார் இசைக் கலைஞர்களின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வும் கலைஞர்கள் கௌரவிப்பும் இன்னிசை நிகழ்வும் குரவில் தமிழ் வித்தயாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இசைக்குழுவின் இயக்குநர் ந.நவச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சி.குகநேசன், ஸ்ரீசபாரத்தினம் அறக்கட்டளை நிதியத்தின் செயலாளர் க.கணேசகுமாரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (த-19)

கலாநிதி ஜெயசீலன் ஞானசீலன் எழுதிய





## 'இன உறவுகளும் வரலாறும்' ஆங்கில நூல் வெளியீடு

முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஜெயசீலன் ஞானசீலன் எழுதிய (Community Relations and Histories) 'இன உறவுகளும் வரலாறும்' எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்துகொண்டார். விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அர்சாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா, வவுனியா வளாக முதல்வர் கலாநிதி தம்பு மங்கலேஸ்வரன், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-56)

# காலத்தின் தடங்கள்



## சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள்



வவுனியா பட்டக்காடு கிராமத்தில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியா பட்டக்காடு ஸ்ரீராம் அறிநெறி பாடசாலை மற்றும் கிராமத்து இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக வவுனியா நகரசபை உறுப்பினர்களான எஸ்.காண்டீபன் மற்றும் ஏ.எம்.லரீப்,ஏ.அப்துல் பாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் கிராமத்து பாரம்பரிய விளையாட்டுக்களான கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, முட்டியுடைத்தல், தேங்காய் துருவுதல், கிடுகு பின்னுதல், சாக்கு ஓட்டம் என்பன இடம்பெற்றன. அத்துடன் சிறுவர்களின் கலை கலாசார விளையாட்டுக்களும் நடைபெற்றன. (ச-110)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

த.நாகேஸ்வரன்



# சிந்தை கவர்ந்திடும் சிலப்பதிகாரம்

தமிழ் மூன்று. தமிழ் வளர்த்த நிலம் மூன்று. தரணியெங்கும் தானை நடத்திய தமிழ் மன்னர் மூவர். சீறி யெழும் பகையடக்கித் தமிழர் நாட்டிய கொடி மூன்று.
தமிழ் செழிக்கத் தங்கநிகர் புலவர்கள் அமர்ந்து தமிழாய்ந்த சங்கங்கள் மூன்று. மூன்றெழுத்தில் முழுமை கண்ட தீந்தமிழர் பொன் மண்ணில் தித்திக்க எழுந்த ஒரு முத்தமிழ் காப் பியமே சிலப்பதிகாரமென்றால் அது மிகையன்று.
**'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மென்று ஓர்மணி ஆரம் படைத்த தமிழ்நாடு'** என்று மார்தட்டுகிறார் மகாகவி பாரதி.
மன்னனாய் மாறவேண்டிய தன் மாண்பினைத் துறந்து இன் முகத் துறவியாய் மாறிய இளங்கோவடிகள் இந்தப் பெருங்காப்பியத்தை வரைந் தளித்தனர்.

இளங்கோவடிகளின் சிலம்பின் பேரொலி உலகமெலாம் பரவி எம் தமி ழன்னையின் புகழை ஒலித்து நிற்கிறது.

## தனித்துவமானது

தமிழில் எழுந்த முதற்பெரும் காப் பியம் என்ற புகழ் சிலம்புக்குரியது. ஏனைய பல தமிழ்க் காப்பியங்களை விட தான் கூறும் கதையால் வேறுபட்டு மேலோங்கி நிற்கிறது சிலப்பதிகாரம். இயல், இசை, நாடகம் என்னும் மூன் றும் தமிழும் சிலம்பில் கொஞ்சி விளை யாடுகின்றன. சேர, சோழ, பாண்டிய நாடுகள் மீது சிலம்பின் கதை தொடர் கிறது.
மொத்தத்தில் சிலப்பதிகாரம் ஒரு தமிழ்க் கதை.
தமிழ்நாட்டின் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு தமிழ்த் தையலின் கதை. ஆடவரை மட்டுமே காவிய நாயகராக அமைத்துப் பாடும் தமிழ்க்காவிய மரபுக்கு இளங்கோ சவால் விடுகிறார்.
**'பெண்ணிற் பெருந் தக்க யாவுள கற் பெனும் திண்மை உண்டாக்கப்பெறின்'** என்ற வள்ளுவர் வாக்கை அவர் தன் காவியத்தில் நிரூபித் துக் காட்டுகின்றார். பிறமொழிக் கதைக ளைப் பிரதிபண்ணா மல் அசலான தமிழ்நி லக் கதையொன்றை தமிழகத்தில் நிகழ்த் திக்காட்டும் சிலப்பதி காரத்தின் புகழ் சொல் லுந்தரமன்று.
**'அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற் றாகும்' 'உரைசால் பத்தினியை உலகம் ஏத்தும்' 'ஊழ்வினை உகுத்து வந்தூட்டும்'** என்னும் மூவகை உண் மைகளை சிலம்பு நிலை நாட்டுகிறது. அறம் தவ றிய பாண்டியன் நெடுஞ் செழியனின் அழிவும், கற்பின் தெய்வமாய் மலர்ந்த கண்ணகி புக ழும், முன்வினைப்பயனால் கோவல னின் இறப்பும் இம்மூன்று உண்மை களையும் நிலைநாட்டி வைக்கின்றன. கண்ணகியின் காற்சிலம்பை விற்க பாண்டிய நாட்டு வீதியிற்சென்ற அவ ளது கணவன் கோவலன் கள்வன் என்று குற்றம் சுமத்தப்படுகின்றான். திருட்டுக்குற்றத்தைச் சுமந்த கோவ லன் விசாரணை இன்றியே கொலை செய்யப்படுகின்றான். தன் அன்பனின் மறைவு கேட்டு ஆரணங்கு கண்ணகி அழுது துடிக்கிறாள். அறம் கொன்ற மன்னனிடம் நீதி கேட்பேன் எனக் கொதித்து எழுகிறாள்.
**'மெய்யிற் பொடியும் விரித்த கருங் குழலும் கையிற் தனிச்சிலம்பும்'** கொண்டு மன்னனை அடைகிறாள். தன் கணவன் கள்வன் அல்லன் என் பதை நிரூபித்து மன்னனுக்கும் முடிவு கட்டி அறந்தவறிய பாண்டிய நாட்டுக்கே அவள் அனல் மூட்டுகிறாள். இதுவே சிலம்பின் கதை.

## கற்பின் தெய்வத்தை தமிழுக்கு ஈய்ந்தது

**'தெய்வம் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய் யும் மழை'** என்ற குறளின் வாக்கை கண்ணகி மூலம் நிலைநாட்டுகிறார் இளங்கோ அடிகள்.
ஒரு சாதாரண வணிக குலத்திலே பிறந்த பெண்ணின் கதையின் முடி விலே சேரநாட்டின் மலையுச்சியிலே நிறுத்தி **'மல்லன் மா ஞாலத்து உள் ளீர் இவள் தெய்வம் தெளிமின்'** என் கிறார் சிலம்புக்கவிஞர்.
இதுதான் சிலம்பு செய்த புரட்சி. முடி யாட்சியின் முரட்டுத் தனத்துக்கு எதி ராக குடிமக்கள் கிளர்ந்து செய்யும் ஒரு மகோன்னதபுரட்சி போல சிலம்பின் கதை அமைகிறது.
**'இடிப்பாரை இல்லாத ஏமரா மன் னன் கெடுப்பாரை இன்றிக் கெடும்'** என்னும் குறளாசான் கருத்து இங்கு நிரூபணமாகிறது.
தமிழர் வாழ்வில் சிலம்பு சாதித்த சாதனை மிகப்பெரியது. ஏனெனில் தமிழர், கல்விக்குக் கலைமகளைக் கண்டனர். செல்வத்துக்குத் திருமக ளைத் துதித்தனர். வீரத்துக்கு மலைம கள் என்றனர்.
ஆனால் பெண்களுக்குரிய கற்புக்கு யார் தெய்வம் என்ற கேள்வி எழுந்த போது வடமொழிக் கதைகளைத் தழுவி அருந்ததியையும் அகலிகையையும் இரவல் வாங்கித் துதித்தனர். ஆனால் இளங்கோவின் சிலம்பு இந்த வறு மையை உடைத்து எறிந்தது.
இதோ கற்பின் தெய்வம் கண்ணகி என ஒரு தமிழச்சியை அந்த உயர்ந்த பீடத் தில் ஏற்றியது!
இந்த ஒன்றே போதும் சிலப்பதிகாரத் தின் பெருமைக்கு.
பைந்தமிழ்க் கவிஞர் பாரதி குதூகலிப் பதுபோல் நாமும் தோள்தட்டி ஆர்ப்ப ரிப்போம்!'
நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மென்று ஓர் மணியாரம் படைத்த தமிழ்நாடு 'வாழ்க இளங்கோ! வாழிய சிலம்பு! வாழிய வாழ்க செந்தமிழே!

---

# கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே கொற்றவன் செந்தூரன்

கே.எஸ்.சிவஞானராஜா



கருவிலே உருவாகிய திருநாள் முதலாக, காலனை வரவழைத்த அந்த நாள் வரை துர்க்கை அம்பா ளின் மணியோசை நாதமோடு பூரித்து வாழ்ந்த புண் ணியனே செந்தூரன் என்னும் கண்ணியவான். அவன் மண்ணிலே உதித்த மாதவன். கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியவன். வளரும் பிள்ளையை முளையில் தெரியும் என்பதற்கு வல்லமை சேர்த்த வடிவழகன். தொட்டது வரமாகும் அற்புதன்!
பெற்றோரின் அரவணைப் போடும் அன்னை தங் கம்மா அப்பாக்குட்டியின் ஆசீர்வாதத்தோடும், கற்றவர் உற்றவர் நற்றவத்தவர் ஆகிய முத்திற வாண்மையோ டும் கல்வியிலும் ஆன்மிக நம்பிக்கையிலும் 'தூரன்' பேறன் உந்த பிரம்ம முகூர்த்தன். அதனால் இல்லம் பூத்தது-
நாலொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகச் செந்தூரனைத் துர்க்கை அம்பாள் தன் பிள்ளைபோல் தொட்டது. அனைத்திலும் வெல்ல வைத்தாள். வெற்றி யைத் தொடரவும் செய்தாள். இவ்வாறு அம்பாளின் அனுக்கி ரகம் செந்தூரனை ஒரு தூய சிவ தொண்டனாக மாற்றியது.
பேரருள் சுவாமிகள் நற்சிந்தனையில் கூறியது போல
அருள் வரும் நமனும்
அருகியே பணி செய்யும்
அருகில் தொன்றுமில்லை
அச்ச [illegible]வில்லை' என்று தன்னை முழுமையாக அம்பாளிடம் பலன் கருதாது ஒப்படைத்துப் பணி செய்த

'தன்கடன் அடியேனையும் தாங்குதல்; என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று அல்லும் பகலும் உடல் பொருள் ஆவி யாவற்றையும் பார்த்துப் பாராமல் அர்ப்பணித்தவன். அவ்வாறு தொண்டாற்றி, தான் சார்ந்த இல்லக் கடமை களையும் பொறுப்பாக்கிய போதுதான், திருமண பந்தம் அம்பாளால் கொடுக்கப்பட்டது.
அது ஒரு வரப்பிரசாதம்.
[illegible] அலைம [illegible] இல்லறம் சுகன்யாவு டன் இனித்தது. இரண்டு செல்வங்கள் இரண்டுமே அற்புதம்

கொண்டு ஆனந்த மாகியபோது ஊரடங்கும் கொரோனாவும் நாட்டில் உச் சமாகி தலைவிரித்தாடியபோது அன்று பயணத்துக்கான அழைப்பு வந்தது. யார் அழைத்தது? யாருடைய உத்தரவு? யார் அனுமதித்தது? யாருக்கு அவனது பெறுமதி புரிந்தி ருக்கும்? அவன் உயிரைப் பறித்த மின்சாரம் இவ்வுலகில் இருக்கும்வரை நீதிக்காக அதேயிடத்தில் தவம் செய்து கொண்டே இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் குழந்தைகள்!

இராமபுரத்தூர் நிஷாந்தன்



சங்ககால இலக்கியங்களில் புறப்பொருள் மரபினைப் பாடியுள்ள ஓர் இலக்கியம் புறநானூறு. மன்னர்களின் போர் மற்றும் வீரம், கொடைச் சிறப்பு என்பவற்றோடு பலவகையான அறக் கருத்துக்களையும் பாடியுள்ள இலக்கியமாக புறநானூறு அமைந்துள்ளது. அத்தகு புறநானூற்றுப் பாடல்களில் ஒன்று மனித வாழ்வியலின் உயரிய தன்மை ஒன்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## ஆனந்தம் தருகின்ற குழந்தைச் செல்வம்


எம் வாழ்வில் குழந்தைச் செல்வம் முக்கியமானதாகும். குழந்தைகள் உள்ள இல்லம் ஆனந்தமயமானதாக விளங்கும். பொதுவாக குழந்தைகளின் குறும்புத்தனங்கள் இரசிக்கத்தக்கவை. தட்டுத்தடுமாறி அவர்கள் பேசுகின்ற மழலைப் பேச்சு கேட்பவர்களுக்குக் களிப்பை ஊட்டும். மேலும் குழந்தைகள் செய்கின்ற ஒவ்வொரு செயல்களும் குறும்புத்தனமுடையதாக மனதுக்கு மகிழ்ச்சியைத் தருவனவாக விளங்கிடும். ஆக, அவ்வாறு குறும்புத்தனம்மிக்க குழந்தைகளைப் பெற்றவர்கள் பெரும்பாக்கியம் செய்தவர்களாம். ஆனால் அவ்வாறான குழந்தைகளைப் பெறாதவர்களுக்கு அவர்கள் வாழும் வாழ்நாள்கள் பயனற்றவையாகும் என பாண்டியன் அறிவுடை நம்பி எனும் புறநானூற்றுப் புலவர் ஒருவர் தன் பாடல் ஒன்றில் அழகுற காப்பியம் செய்திருக்கின்றார். அப்பாடலைக் காணுங்கள்.

**"படைப்புப் பல படைத்து**
**பலரோடு உண்ணும்**
**உடைப் பெருஞ்செல்வர்**
**ஆயினும் இடைப்பட குறுகுறு**
**நடந்து சிறுகை நீட்டி இட்டும்**
**தொட்டும்**
**கவ்வியும் துழந்தும் நெய்யுடை**
**அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லி**
**லோர்க்கு பயக்குற**
**இல்லை தாம் வாழும் நாளே"**

பலவகையான செல்வங்களை உண்டாக்கி, பலரோடு கூடியிருந்து உண்ணுகின்ற பெருஞ்செல்வவளம் பெற்றிருப்பவராக ஒருவர் விளங்கினாலும், உணவை உண்ணும்போது இடையிடையே குறுகுறுவென நடந்து வந்து, தனது சிறுகையினை நீட்டி, நெய் கலந்திருக்கின்ற உணவினில் தம்கையினை வைத்தும், கையினால் அந்த உணவினைத் தொட்டும், தம்வாயினால் அவ் உணவினைக் கவ்வியும், தம் கைகளினால் உணவினை அளைந்தும், தம் உடலில் அவ் உணவினை சிந்தியும், இத்தகைய செயல்களால் காண்பவரை மயக்குகின்ற குழந்தைகள் வாழ்தலுக்கு அவசியம் என்பது இப்பாடலின் பொருளாகும்.

## குறும்புத்தனத்தின் மன்னன் கண்ணன்

குழந்தைகளின் குறும்புத்தனங்கள் சிலவேளைகளில் எல்லை மீறியும் போவதுண்டு.



அவ்வேளையில் அவர்களைத் தண்டிக்க வேண்டும் என மனம் விரும்பினாலும், அது இயலாமல் போய் விடுகின்றது. இதற்கு சிறியதொரு உதாரணம். ஆயர் பாடி கோகுலத்தில் யசோதையின் அரவணைப்பில் வளர்ந்து வரும் கண்ணன் புரிந்த குறும்புத்தனங்களை நாம் அறிவோம். உறியினில் வைக்கப்பட்ட வெண்ணெய்யைத் திருடி உண்ணுதல், கன்றுக் குட்டிகளின் காதுகளில் கட்டெறும்பினைப் பிடித்து விடுதல், கோபியர்கள் தலையில் சுமந்து செல்லும் பால் மற்றும் வெண்ணெய் நிறைந்த பானைகளை உடைத்தல், மாட்டுத் தொழுவத்தில் உள்ள புழுதியில் பிரண்டு விளையாடுதல் இப்படியாக கண்ணனது குறும்புகள் எண்ணிலடங்காதவை. கண்ணனின் இத்தகு குறும்புகளை பெரியாழ்வார் தன் பாசுரத்தில்;

**"கன்றுகள் ஓடச் செவியில்**
**கட்டெறும்பு பிடித்திட்டால்**
**தென்றிக் கெடுமாகில்**
**வெண்ணெய் திரட்டி விழுங்**
**குமா காண்பன் நின்ற மரா**
**மரம் சாய்த்தாய், நீ பிறந்த**
**திருவோணம்**
**இன்று நீ நீராட**
**வேண்டும்**
**எம்பிரான், ஓடாதே**
**வாராய்"**

எனவாறு பாடிச் செய்துள்ளார். கண்ணனின் இக்குறும்புகளைக் காணும் யசோதை மற்றும் கோபியர்களுக்கு கோபம் எழுந்தாலும் மறுகணமே கண்ணன் மீது கொண்ட அன்பினால் அவர்களது கோபம் மறைந்து போய் விடுகின்றது. அந்த அளவுக்கு தன் குறும்புச் செயல்களால் காண்பவரை மயக்கி விடுவான் அந்த மாயக்கண்ணன்.

# திரைக்குப் பின்னால் சின்னக் கலைவாணர்





ஒரு நகைச்சுவை நடிகரின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்ட நிகழ்வு, வரலாற்றின் ஒரு புதிய தொடக்கம். நெடிய தமிழ் சினிமா மரபை எடுத்துக்கொண்டால், என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஆர்.ராதா இருவரின் கலவையும் தொடர்ச்சியும் என்று விவேக்கைச் சொல்லலாம்.

பழைமைவாதத்தையும் மூடத்தனத்தையும் சிரிக்கச் சிரிக்க விமர்சித்து, சிந்திக்க வைக்கும் நகைச்சுவைப் பாணி அவருடையது. சமூக மாற்றத்துக்கான பகுத்தறிவுக் கருத்துக்களைத் திரைப்படங்கள் மூலமாகச் சொல்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், அன்றாட வாழ்விலும் சாத்தியப்பட்ட வழிகளில் எல்லாம் மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கும் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டார்.

இன்று விவேக்கை அதிகம்அதிகமாய் பேசுபொருள் ஆக்கியுள்ளவை அவர் நடித்த படங்கள் அல்ல. மாறாக அவரின் சமூகவியல், சூழலியல் பணிகளே. அப்துல்கலாமின் கனவுகளில் கொஞ்சத்தையேனும் சுமந்தபடி வாழ்ந்தவர்தான் விவேக். 'கிறீன் கலாம்' என்ற திட்டத்தின் கீழ் ஒரு கோடி மரங்களை நடுவதுதான் அவரது பெருங்கனவு. அது நிறைவேறாமல் 33 லட்சம் மரங்களுடன் விவேக் தன் வாழ்வை முடித்துக்கொண்டார். ஆனால், விவேக்கின் மறைவும்கூட ஒரு புத்தெழுச்சியை மக்கள் மத்தியில் குறிப்பாக, இளையவர்கள் மத்தியில் பாய்ச்சியிருக்கின்றது. அவரின் பெயரால் இன்று எண்ணற்ற மரங்கள் இந்தியாவிலும் தமிழ் நாட்டிலிலும், இந்தியாவுக்கு வெளியே கடல்கடந்து இலங்கை, மலேசியா, அமெரிக்காவிலும் நடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு மனிதன், ஒரு கலைஞன், ஒரு ஆதர்சம் எவ்வாறு வாழவேண்டும் என்பதை மிக அழகாகவும், ஆழமாகவும் கற்பிதம் செய்கின்றார் விவேக்.

விவேக்கின் இறப்புக்கு அவர் ஏற்றிக்கொண்ட கொரோனாத் தடுப்பூசிதான் காரணம் என்ற குற்றச்சாட்டு ஒரு சிலரால் முன்வைக்கப்படுகின்றது. மருத்துவத்துறை ஆழமாக அதை மறுத்துரைத்துத் தெளிவுபடுத்திய பின்னரும்கூட இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன. கொரோனாவுக்கு எதிரான போரில், தடுப்பூசியே இன்று மனிதகுலம் கொண்டிருக்கும் முக்கியமான ஆயுதம் என்பதை மிகத் துல்லியமாக உணர்ந்திருந்த விவேக், தடுப்பூசியைத் தான் செலுத்திக்கொண்டதும், அதற்கு அரசு மருத்துவமனையைத் தேர்ந்தெடுத்ததும், ஊடகங்கள் வழியாகப் பொதுமக்கள் மத்தியில் அதைப் பிரசாரமாக முன்னெடுத்ததும் அவருடைய சமூகப் பணியின் தொடர்ச்சி. அவருடைய எண்ணங்களுக்கு நேர் எதிராக கொரோனா தடுப்பூசிக்கு எதிர்ப் பிரச்சாரத்துக்கு ஒரு கூட்டம் இன்று அவருடைய மரணத்தையே ஒரு ஆயுதமாக்க முற்படுவது இந்தச் சமூகத்தில் புரையோடியிருக்கும் சில மூடத்தனங்களுக்கு எதிராக் காலம் முழுவதும் நாம் போராடிக்கொண்டேதான் இருக்க வேண்டுமோ எனும் சலிப்பையே உண்டாக்குகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

தரணியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு பெறுகைக்கான அழைப்பு மருத்துவ உபகரணப்பொருட்கள் வழங்கல் - 2021

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுதலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரை யிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றேன்.

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| PSSP/MEP/2021/05 | Oxygen Cylinder Trolley | 07 | 10,000.00 |
| | Bathroom Scale | 12 | |
| | Emergency Trolley Board | 07 | |
| | Height Measuring Board | 04 | |
| | Snellen Chart | 03 | |
| | Sterilizer | 03 | |
| | Thermometer Digital | 20 | |
| | Spring Balance | 10 | |
| | Thermometer | 10 | |
| PSSP/MEP/2021/06 | Cardiac Bed | 04 | 30,000.00 |
| | Delivery Bed | 01 | |
| | Ice line Fridge | 05 | |
| | Dental Chair and Equipment | 01 | |
| PSDG/MEP/2021/01 | Nebulizer | 02 | 10,000.00 |
| | Neonatal Pulse Oxy meter | 01 | |
| | Hand Head Doppler | 01 | |
| | Multipara Monitor Normal | 01 | |
| | Infusion Pump | 03 | |

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| PSDG/MEP/2021/02 | Auto Clave | 02 | 20,500.00 |
| | ECG Machine | 02 | |
| | BP Apparatus -Digital | 11 | |
| | Auroscope | 01 | |
| | Ophthalmoscope | 01 | |
| | Digital Thermo meter | 10 | |
| | Sucker Machine | 03 | |
| | Spot Lamp | 02 | |
| | Stethoscope | 02 | |
| PSDG/MEP/2021/03 | Stretcher | 04 | 15,000.00 |
| | Wheel chair | 04 | |
| | Dressing Trolley | 02 | |
| | Medicine Trolley | 02 | |
| | Emergency Trolley | 02 | |
| | Oxygen Regulator | 02 | |
| | I.V.Stand | 05 | |
| | Folding Screen | 02 | |
| PSDG/MEP/2021/04 | Mortuary Cooler | 01 | 25,000.00 |
| PSDG/MEP/2021/05 | Incinerator | 01 | 110,000.00 |

- விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிளக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாகசெலுத்தி ஆங்கில மொழி யிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலகநாட்களில் 21.04.2021 தொடக்கம் 10.05.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் 11.05.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 11.05.2021 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் ( T.P:021 229 0111, Fax : 021 2290 104 ) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.**

## பம்பைமடுவில் 7 பேருக்குத் தொற்று

வவுனியா, ஏப்.21

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 7 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்குத் திரும்பியவர்கள் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் ஒரு தொகுதி முடிவுகள் நேற்று வெளிவந்த நிலையில் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (எ-110)

## விஜயதாசவின் மகனுக்கு பிணை

கொழும்பு, ஏப்.21

வாகன விபத்துச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்சவின் மகன் ரகித ராஜபக்ச பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று மாலை முன்னிலைப்ப டுத்தப்பட்டதை அடுத்து ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இராஜகிரிய பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 4 பேரைக் காயமடையச் செய்த சம்பவம் தொடர்பில் அவர் நேற்றுக் காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டி ருந்தார். இந்த விபத்தின் பின்னர் காயத்துடன் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-22)


**Immediate Vacancy for Document Controller**

**Candidate profile:**

- G.C.E (A/L) with at least a simple pass for English or a Credit pass in English for G.C.E (A/L)
- Computer literacy with proficiency in MS office
- Fluency in English, Communication and Team work skills
- Previous Experience in construction site

**Job Scope:**

Control of documents, Records and information across the organization

**Location:** Jaffna (Project Office)

The above position provides excellent career progression opportunities in a professional working environment along with attractive remuneration

If you can fulfill the above requirement, please contact to the address below within a week

WKK Engineering (Pvt)Ltd,
Project Office, Main Street, Chankanai, Jaffna.
*E-mail: iroadjf2.genwkk@gmail.com*
*021 225 0137*


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த (20.03.2021) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயார்

**திருமதி பத்மாவதி துரைராஜா**

**(யாழ் இந்து மகளீர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் தற்போதய கொவிட்-19 (COVID-19) சூழ்நிலை காரணமாக எளிமையான முறையில் 19.04.2021 திங்கட் கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்றது.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வழங்கிய மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சுவேலியில் வேலை வாய்ப்பு**

தையல் தொழிலில் கைவேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. மாதம் 10.000 - 15.000 வரை மதிய உணவு வழங்கப்படும்.

**074 179 1300**

**வேலை வாய்ப்பு**

யாழ்நகரில் உள்ள பிரபல கவரிங் நகைகள் விற்பனை நிலையத்திற்கு உதவியாளர்கள் தேவை.

**077 351 5980, 077 373 4109**

**வீடு வாடகைக்கு**

பலாலி றோட் 2ஆம் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு **077 432 5040**

உ

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

மஹாராஜ. ராஜஸ்ரீ .............................................................................. அவர்களுக்கு

அனேகநமஸ்காரம் / ஆசீர்வாதம் / உபயகுசலோபரி

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான பிலவ வருஷம் சித்திரைமாதம் 09ஆம் நாள் (22.04.2021) வியாழக்கிழமை பூர்வபக்ஷ தசமி திதியும் மக நட்சத்திரமும் சித்தாம்ருத யோகமும் கூடிய காலை 09.40 மணிமுதல் 11.37 மணிவரையுள்ள மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில்

திருச்சியைச் சேர்ந்த **கௌண்டின்ய கோத்திரம்**
ப்ரம்மஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணஐயர் முத்துலக்ஷ்மி தம்பதியரின்
பௌத்திரனும்
நல்லூர் "வித்யாசாகர நியாய சிரோமணி" ஸ்வர்க்கீய ஸ்ரீ
ப்ரம்மஸ்ரீ. கி.சுப்பிரமண்ய சாஸ்திரிகள் கமலாதேவி தம்பதியரின்
**கனிஷ்ட புத்திரனும்**
எமது சகோதரனுமாகிய
**சிரஞ்ஜீவி நவநீத கிருஷ்ண சர்மா**
**என்கின்ற வரனுக்கு**

சரசாலை வடக்கைச் சேர்ந்த **காசிப கோத்திரம்**
ப்ரம்மஸ்ரீ பரமசாமிஐயர் புவனேஸ்வரி
தம்பதியரின் பௌத்திரியும்
சரசாலை "யாகசம்ரக்ஷக விபூஷண்"
ப்ரம்மஸ்ரீ ப. சோமாஸ்கந்தசர்மா
கிரிஜாதேவி தம்பதியரின்
**கனிஷ்ட புத்திரியுமாகிய**
**சௌபாக்கியவதி கிருஷ்ணவேணி**
**என்கின்ற வதுவை**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்ரஹணம் செய்வதாய் ஸ்ரீ கைலாசநாதப்பிள்ளையார் ஸ்ரீ நடேசப்பெருமாள், சரசாலை சிதம்பர விநாயகப்பெருமான். மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்தி விநாயகப் பெருமான் திருவருட் துணையுடனும். ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு பரமாச்சார்யார் பரிபூர்ண குரு அனுக்ரகத்துடனும் பெரியோர்கள் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் சாவகச்சேரி மீசாலை டச்சு வீதியில் அமைந்துள்ள **"பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில்"** நடைபெற இருப்பதால். தாங்கள் தங்கள் இஷ்ட மித்ர பந்துக்களுடன் வருகை தந்து மேற்படி சுபமுகூர்த்தத்தை சிறப்பித்து தம்பதியரை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்பாக அழைக்கின்றோம்.

**பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற இருந்த மேற்படி சுபமுகூர்த்த திருமண நிகழ்வானது கொவிட்-19 சூழலைக் கருத்திற்கொண்டு சரசாலை வடக்கு சரசாலையிலுள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறும்.**
**திருமண வரவேற்பு உபசார நிகழ்வு வெள்ளி மாலை 5.00 ற்கு இலங்கை வேந்தன் மண்டபத்திற்கு அருகில் உள்ள 33, கடைச்சாமி வீதி நீராவியடியில் அமைந்துள்ள மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

*இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்*

**ஸ்ரீமான் ஸ்ரீமதி**
**சு.ராதாகிருஷ்ணசர்மா அகிலாண்டேஸ்வரி குடும்பத்தினர்**
**ஸ்ரீமான் ஸ்ரீமதி சு.பாலகிருஷ்ணசர்மா பத்மாவதி குடும்பத்தினர்**
**"ஹேரம்ப பவனம்" 93–கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே:– 077 869 2341**

**ஸ்ரீமான் ஸ்ரீமதி**
**ப.சோமாஸ்கந்தசர்மா கிரிஜாதேவி குடும்பத்தினர்**
**சரசாலை வடக்கு, சரசாலை,**
**சாவகச்சேரி.**
**தொ.பே :– 077 352 0763**

*சுபமஸ்து*
*(இருவீட்டார் அழைப்பு)*

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) சபை நிதி-2021

01 வலிகாமம் வடக்கு பிரதேசசபை, **சபை நிதியினைக்** கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02 தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03 **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதிபுனரமைப்பு, கட்டட வேலைகளுக்கு கோருகின்றார்.

04 கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதிபுனரமைப்பு, கட்டடநிர்மாண அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.

05 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** தொலைபேசி:-0212241130, தொலைநகல்:-0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 21.04.2021 ஆம் திகதியிலிருந்து 05.05.2021 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 21.04.2021ஆம் திகதியிலிருந்து 05.05.2021 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08 கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 05.05.2021 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் /பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப் படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுடி யாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடி யாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 1 | NP/14/41(14)/05 /02/122/CF-04/2021 | சுற்றுமதில் அமைத்தல் -பலாலி தெற்கு வசாவிளான் இந்து மயானம் | 1.000 | 90 நாட்கள் | C9/C8 கட்டட நிர்மானம் | 63 நாட்கள் | 07.07.2021 | 10000.00 | 04.08.2021 |
| 2 | NP/14/41(14)/05 /02/123/CF-05/2021 | உயனை 02ஆவது இடது பக்கவீதி புனரமைப்பு | 3.574 | 90 நாட்கள் | C8/C7 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 07.07.2021 | 36000.00 | 04.08.2021 |
| 3 | NP/14/41(14)/05 /02/125/CF - 07/2021 | வசாவிளான் அம்மன் கோவில் தெற்கு வீதி புனரமைப்பு | 1.547 | 90 நாட்கள் | C9/C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 07.07.2021 | 16000.00 | 04.08.2021 |
| 4 | NP/14/41(14)/05 /02/124/CF-06/2021 | மதகுஅமைத்தல் - சேந்தான் குளம் | 1.000 | 90 நாட்கள் | C9/C8 கட்டட நிர்மாணம் | 63 நாட்கள் | 07.07.2021 | 10,000.000 | 04.08.2021 |

09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 28.04.2021 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

திரு.சோ.சுகிர்தன் (தலைவர்)
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை

21.04.2021

# கோத்தாவின் பொய்முகத்தை தோலுரித்துக் காட்டுவேன்!

*அரசின் மிரட்டலுக்கு அடிபணியேன் என விஜேதாச எம்.பி. சீற்றம்*

கொழும்பு, ஏப்.21

எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தோ அல்லது நான் உள்ளிட்ட எனது குடும்பத்தினரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தோ அரசு மிரட்டினால் அதற்கெல்லாம் அடிபணியமாட்டேன். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பொய்முகத்தை அம்பலப்படுத்தியே தீருவேன். இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்தார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ச.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் அரசுமீதும், ஜனாதிபதி மீதும் நான் வசைபாடுகிறேன் என்று அமைச்சர்கள் சிலர் புலம்புகின்றனர்.

அதேவேளை, ஜனாதிபதி என்னை அச்சுறுத்தவில்லை எனவும், உயிராபத்து எதுவும் எனக்கு இல்லை எனவும் மேலும் சில அமைச்சர்கள் பொய்யான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

தத்தமது அமைச்சுப் பதவிகளைத் தக்க வைப்பதற்காக அவர்கள் என்னைத் திட்டித் தீர்க்கலாம். ஆனால், எனக்கோ அமைச்சுப் பதவி பெறும் நோக்கமோ அல்லது அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்ற ஆதங்கமோ இல்லை. இலங்கையை வெளிநாடுகளுக்குத் தாரை வார்க்கும் நோக்குடன் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் மக்கள் ஆணை வழங்கவில்லை. நாடு மீண்டெழ வேண்டுமென்றே மக்கள் விரும்புகின்றனர். ஆனால், அரசிலுள்ள முக்கிய தரப்பினர் நாட்டை சீனாவுக்குத் தாரை வார்த்து அதில் சுகபோகங்களை அனுபவிக்க முயல்கின்றனர்.

இதைத்தான் நான் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டினேன். உண்மைகளைக் கூறியமைக்காக நான் சிறை செல்லவும் தயார் என்றார். (எ–22)

**புதிய முத்துச்சப்பறம்**

அச்சுவேலியிலிருந்து ஆலயங்களுக்கு தேவையான முத்துச்சப்பறம். அன்னச் சப்பறம். படல் சப்பறம். வைபர் சப்பறம் போன்றன மிகக் குறைந்த வாடகையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: சிவஸ்ரீ பா.மனோகரக் குருக்கள்
தீர்த்தாங்குளம், அச்சுவேலி.
**077 725 4627**

**வேலையாள்கள் தேவை**

**கோயில் வேலைக்கு ஆள்கள்** தேவை.
விருப்பம் உடையோர் தொடர்புகொள்ளவும்.

**077 055 8493, 077 899 6393**

**வேலையாட்கள் தேவை**

யாழில் இயங்கும் பலசரக்கு மொத்த வியாபார நிறுவனத்திற்கு
- **சிட்டை எழுதுனர்**
- **மனேஜர்**
- **காசாளர்**
- **களஞ்சியப் பொறுப்பாளர்**

உடன் தேவை

**தொடர்பு: 077 386 6250**

**வேலையாள் தேவை**

பேக்கரி வேலைக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.


**துர்க்கா பேக்கரி**
பொற்பதி வீதி, கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூர்கிறோம்

(மறந்தால் தானே நினைப்பதற்கு !!!!!!)

மண்ணிற்கு 06 . 11 . 1966 சித்தங்கேணி



விண்ணிற்கு 21 . 04 . 2020 இலண்டன்


## அமரர் சச்சிதானந்தம்பிள்ளை விஜயராகவன்

21.04.2021

வருடம் ஒன்றாகிவிட்டது
நீ மீளாத்துயில் கொண்டு
எம் மனதோ அதை ஏற்க மறுக்கின்றது-ஆம்
எம் மனதோ அதை ஏற்க மறுக்கின்றது
நீ எப்போதும் எம்முடன் இருப்பது போன்ற ஏகாந்த உணர்வு
எம்முள் நிலையானது
நீ எம்மை எப்போதும் அவதானித்து
எம்மை நல்வழிப்படுத்தகின்றாய் என்பது எம் மனமறிந்த உண்மை.
நல்ல மகன், நல்ல சகோதரன்,
நல்ல கணவன், நல்ல தந்தை
நல்ல உறவினன், நல்ல நண்பன்,
நல்ல ஒருவன் இவற்றிற்கு ஒரே சொல் விஜி-ஆம்
இவற்றிற்கு ஒரே சொல் விஜி
அன்பிற்கு இலக்கணமானவனே
எம் உயிரினிலும் மேலானவனே
என்றும் எம் மனதில் வீற்றிருப்பாய்.

சித்தங்கேணி நண்பர்கள்

# மரண அறிவித்தல்



தோற்றம் 22.02.1947 — மறைவு 20.04.2021

## திரு. சின்னப்பு பத்மநாதன் (பாலு)

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னப்பு பத்மநாதன் நேற்று (20.04.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
கனகேஸ்வரி (மனைவி ) 076 6695 116
சுகிரதன் - 077 844 8056

# மரண அறிவித்தல்



## திருமதி
## நாகம்மா கிருஷ்ணர்

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கிருஷ்ணர் அவர்கள் 20.04.2021 செவ்வாய்க் கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலை - நாகி தம்பதிகளின் மகளும், சிவலோகமடைந்த அமரர்திரு கிருஷ்ணர் அவர்களின் அன்பு மனைவியும், மறைந்த அமரர் இந்திரவதி மற்றும் இந்திராதேவி, தவரத்தினம், நவரத்தினம், குகரத்தினம், றஞ்சனாதேவி (சுவிஸ்), சிவதேவி மற்றும் இறைபதமடைந்த கணேசரத்தினம், தர்மரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபாபதி, இராசரத்தினம், தேவி, சுசீலா, லலி, குகனேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), ஜெயசீவரத்தினம், குகனேஸ்வரி ஆகியோரின், அன்புமிகு மாமியாரும், கலைச்செல்வி, கலைமகள் (லண்டன்), தவயோகராசா, பிரசாந், தனிஸ்ரா (லண்டன்), அமரர் பிரதாபன், சுதர்சினி (பெல்ஜியம்), சியாமினி, ராசகுபேரன், தாட்சாயினி, பார்த்தீபன் (பின்லாந்து), சாரங்கன், சிந்துஜா (பிரான்ஸ்), திசாயினி, தரணிகா, வேணுயா, துஜீபா (சுவிஸ்), தர்வீனன் (சுவிஸ்), அனோஜா, பிரீதா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், ஜெயானந்தன் (பிரான்ஸ்), பஞ்சலிங்கம் (லண்டன்), றொனால்ட்றீகன் (லண்டன்), குலமதி, வரதகுமார் (பெல்ஜியம்), கிருஷ்ணசீலன் (பிரான்ஸ்), ஜெயதர்சினி, தவபாலன், தவராசா, தவசீலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தக்ஷியன், பிரசாத் (லண்டன்), தர்சன் (லண்டன்), பிறிஷ்ரிகா (லண்டன்), திரிஷ்னா, துளசித், ஆஸ்னா (பெல்ஜியம்), ஜஸ்வரன் (பெல்ஜியம்), அதிஷ்ரனா (பெல்ஜியம்), அதிஷ்வரன் (பெல்ஜியம்), லக்ஷா (பிரான்ஸ்), சாலுசா (பிரான்ஸ்), சயனிகா, வர்ஷினி, மகஸ்ரீதா, அதிஷ்ரிதா, தனிஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 316 9587

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரில்...

கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் நடைபெற்ற போரின்போது வடபகுதியில் எத்தனையோ ஆலயங்கள் குண்டு வீசப்பட்டு தாக்கப்பட்டன. அதில் எத்தனையோ மக்கள் இறந்தார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அப்போது தென்பகுதியில் இருந்து எவரும் எங்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிச்சயமாக இருக்கின்றது. அது உண்மைதான்.

இந்த வேளையிலே அரசிடம் நாங்கள் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம். இந்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவுகூருவதற்கு அனுமதி வழங்கி அதற்கான பாதுகாப்புகளை நீங்கள் கொடுக்கிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி சொல்கின்றோம்.

இதேபோல தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் 30 ஆண்டுகளாக அனுபவித்த போரால், இறந்த ஆயிரக்கணக்கான மக்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எங்களுக்கு அனுமதி தரவேண்டும். பாதுகாப்புத்தர வேண்டும். நாங்கள் செய்ய வேண்டிய ஒரு உணர்வுபூர்வமான நிகழ்வாக இது இருக்கிறது. இந்த விடயம் தொடர்பில் அரசு அதிக கரிசனை எடுத்து அனுமதிகளை விரைவில் வழங்க வேண்டும் என வின்யமாகக் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (ப)

## ஒரு வாரமே...

தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் பாடங்களைப் பூரணப்படுத்துவதற்கான தேவையைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை, ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதியிலிருநது 30ஆம் திகதி வரையும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இதனால், மாணவர்களுக்கு நீண்ட விடுமுறை வழங்க முடியாது.

அதற்கமைவாக ஓகஸ்ட் மாதத்துக்கான இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

## ஈஸ்டர் தாக்குதல்...

கட்டுவப்பிட்டி செபஸ்தியார் ஆலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மற்றும் கொழும்பில் இருக்கின்ற உல்லாச விடுதிகள் போன்றவற்றில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் 269 பேர் கொல்லப்பட்டனர், 500க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். பலர் அங்கவீனர்களாகினர். ஏராளமானோர் சொத்துக்களை இழந்தனர். இந்தத் தாக்குதல்களின் இரண்டாவது ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் நாடெங்கிலும் உணர்வெழுச்சியுடன் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றன.

தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக இன்று காலை 8.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியைச் செலுத்த வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன், அஞ்சலி நிகழ்வுகளுக்காக இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளுக்கும் இன்று சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. தாக்குதல்கள் நடத்தப்பட்ட ஆலயங்களிலும், நாட்டின் பல பாகங்களிலும் உள்ள இதர ஆலயங்களிலும் இறந்தோரின் ஆத்ம சாந்திக்காக இன்று ஆராதனைகளும் வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. (ம)

## உயிர்த்த ஞாயிறுத்...

மன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விசாரணை நடத்தியவர்களைக் கைது செய்து சிறையில் போட்டும், விசாரணை நடத்திய அதிகாரிகளை இடமாற்றியும் இந்த அரசு எதை மூடி மறைக்க முனைகின்றது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளின் பின்னணியில் ஒரு புலனாய்வுத்துறை அதிகாரியைக் கைது செய்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளும்போது, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இது எங்களின் விடயம் என்று கூறி அவரை அழைத்துச் சென்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் நான் வெளியிடும் தகவல்கள், ஆணைக்குழு சாட்சியங்களில் உள்ள மற்றும் ஆணைக்குழு அறிக்கையில் இருந்து மறைக்கப்பட்டவையாகும். தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என ஒருவர் பெயரிடப்பட்டிருந்தாலும், அவரைத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கேனும் அழைக்கவில்லை.

குண்டு வெடித்த தினத்தில் ஷானி அபேசேகர என்ற பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியே முதலில் இணைய ஐ.பி. முகவரி மூலம் தாக்குதலுடன் தொடர்புடைய நபரைக் கைது செய்துள்ளார்.

அதில் புலனாய்வு அதிகாரி ஒருவரும் சிக்கியுள்ளார். இது தொடர்பாக ஆணைக்குழுவில் தகவல்கள் வெளியில் வந்தபோதும், அது தொடர்பான அறிக்கையில் வெளிவரவில்லை.

இந்த அதிகாரியைக் கைதுசெய்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளும்போது, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் 'இது எங்களின் விடயம்' என்று கூறி அவரை அழைத்துச் சென்றுள்ளனர் என்று ஆணைக்குழுவில் சாட்சியங்கள் உள்ளன. ஆனால், இவை எதுவும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் இல்லைஎன்றார். (எ-22)

## அடையாளமற்ற...

ஹெகெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இணையத்தளங்கள் வாயிலாக பொய்யான தகவல்களைப் பரப்புவதால் மோசமான அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அவை சமூகத்தை பிளவுபடுத்துவதற்கும், வெறுப்புணர்வை பரப்புவதற்கும், ஜனநாயக நிறுவனங்களை பலவீனப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பல நாடுகள் சட்டங்களை வகுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. சமூக பாதுகாப்புக்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பிரஜைகளும், சிவில் சமூகத்தவர்களும் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கான சட்ட வரைவைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பில் நீதி அமைச்சரும், வெகுசன ஊடக அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தச் செயற்பாடானது ஊடக தணிக்கை அல்ல. மாறாகக் கௌரவமாகப் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் தொழில் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கான செயற்படாகும். என்றார். (எ-இ)

## பின்வாங்கிய...

மேற்கொள் [illegible] வெளியான [illegible] வையாகவும், தாம் சர்வதேச சக்திகளையும் வகாபிஸத்துடன் அவற்றுக்குள்ள தொடர்புகளையுமே குறிப்பிட்டடேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னுடைய கருத்துக்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன. இந்த நாட்டில் இஸ்லாமியதீவிரவாதமோ அதன்விரிவாக்கமோ இல்லை என்று நான் ஒருபோதும் குறிப்பிடவில்லை. நான் எந்தவொரு அரசியல் சக்தியைப் பற்றியும் குறிப்பிடவில்லை. நான் வகாபிஸம் பற்றியும் அதனை எப்படி சில சக்திமிக்க நாடுகள் பயன்படுத்தி வருகின்றன என்பது பற்றியுமே பேசினேன். நான் எந்த உள்நாட்டு அரசியல் சக்திகளைப் பற்றியோ தலைவர்களைப் பற்றியோ குறிப்பிடவில்லைஎன்றார்.

நேற்றுமுன்தினம் பொரளையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித், 'ஈஸ்டர் தாக்குதல்களானவை மதத் தீவிரவாதம் அன்றேல் மதம் மீதுள்ள அதீத பற்றினால் நடத்தப்பட்ட தொன்றாக நாம் காணவில்லை. மாறாக குறித்த அரசியல் சக்திகள் தமது அதிகாரத்தை, நிலையை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட முயற்சியாகவே கருதுகின்றோம்' என்று கூறியிருந்தார்.

கர்தினாலின் கருத்துக்கள் தற்போது எதிர்க்கட்சியிலுள்ள ஒரு சில தரப்பினரின் உணர்வலைகளை எதிரொலிப்பவையாகக் காணப்பட்டன. தற்போதைய அரசிலுள்ள தரப்பினருடன் தொடர்புடைய சக்திமிக்க அரசியல் சக்திகளே இந்தக் குண்டுத்தாக்குதல்களை திட்டமிட்டன என எதிர்க்கட்சியிலுள்ள சில தரப்புக்கள் அவ்வப்போது கருத்துக்களை வெளிப்படுத்தி வந்துள்ளன.

கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்த கடும் தொனியிலான கருத்துக்களை கத்தோலிக்க திருச்சபை மறுதலித்த இரண்டாவது சந்தர்ப்பமாக நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பு அமைந்துள்ளமை சுட்டிக்காட்டத் தக்கது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதல்களை நடத்திய குற்றவாளிகள் தொடர்பாக அரசு மேற்கொண்டு வருகின்ற விசாரணைகளில் போதிய முன்னேற்றம் காணப்படாமை, அன்றேல் விசாரணை வினைத்திறன் வீரியமாக காணப்படாமை குறித்து அண்மைக்காலமாக கர்தினால் விரக்தியடைந்தவராக கடுந்தொனியில் கருத்துக்களை வெளிப்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது.

இந்த மாத முற்பகுதியில் கோபத்துடன் கூடிய முகபாவனையோடு காணப்பட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையாகச் சாடியிருந்தார். மீண்டும் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக தேர்தலில் போட்டியிடப் போகிறேன் என மைத்திரிபால சிறிசேன கூறியமை தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்த கர்தினால், சிறிசேன ஆடையை அணிந்துகொண்டா இப்படிக் கருத்து வெளியிடுகின்றார் என்று வினவியிருந்தார்.

எனினும், இலங்கை கத்தோலிக்க ஆயர் இல்லத்தின் தொடர்பாடல் பணிப்பாளரான அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ, கர்தினாலின் கடுந்தொனியிலான கருத்துக்கள் எவர் மீதான தனிப்பட்டதோ அன்றேல் அரசியல் ரீதியானதான கருத்துக்கள் அல்ல என்று தெரிவித்தார்.

'எவரையும் அரசியல் ரீதியாக தாக்கும் நோக்கத்தை கர்தினால் எந்தச் சந்தர்ப்பத்திலும் கொண்டிருக்கவில்லை. ஈஸ்டர் தாக்குதல்களை நாம் தேசிய பேரனர்த்தமாகக் கருதுகின்றோம். அந்தத் தாக்குதல்கள் தேசிய பாதுகாப்புக்குப் மிகப்பெரும் அச்சுறுத்தலாக அமைந்தன. அந்த அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருந்துகொண்டே உள்ளது' என்று அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார். (ம-22)

## இளம் குடும்பத்...

யைச் சேர்ந்த மு.கௌசிகன் (வயது-31) [illegible] கொலைசெய்யப்பட்டுள்ளார்.

[illegible] உள்ள உறவினர்களான இரு தரப்புகளுக்கு இடையே நீண்டகாலமாக இருந்த பிரச்சினையாலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. நேற்றுக் காலை இது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையே தர்க்கம் ஆரம்பித்துள்ளது. அது மோதலாக மாறி வாள்வெட்டில் முடிந்துள்ளது என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மோசமான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. அருகருகே உள்ள வீடுகளில் வசிக்கும் உறவினர்களிடையே இந்த மோதல் நடந்துள்ளது. இரு தரப்புகளுக்கும் இடையே நேற்றுக் காலை முதல் முறுகல் நிலைமை இருந்தது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இரு தரப்பினரும் வீதியில் துரத்தி மோதிக் கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவர் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரியவருகின்றது. தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## கொரோனா...

'தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் நாட்டில் தற்போது அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை காரணமாக எந்தவொரு மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்த வேண்டாம் என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் கேட்டுக்கொள்கின்றது.

இந்தத் தீர்மானத்துக்கு இணங்க அரசியல் கட்சிகள் செயற்பட வேண்டும். கொரோனாவின் மூன்றாவது அலை உருவெடுக்க எவரும் இடம் கொடுக்கக்கூடாது. மக்கள் அனைவரும் முறையான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். (எ-22)

## யாழில்...

பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் நேற்று 643 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

அத்துடன் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தலில் இருந்த இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-26)

## ஹெரோய்ன்...

றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வல்லைச் சந்தியில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும், அவர்களிடம் இருந்து 6 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். 40 வயதுடையவரும், 38 வயதுடைய அவரது மனைவியுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களது உரிமைகளுக்காக மாகாணத் தேர்தல் கட்டாயம்

## இந்தியா வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 21**

**இலங்கைத் தமிழர்கள் கோரும் சமத்துவம், சம உரிமை, நீதி மற்றும் சமாதானம் ஆகியவை உள்ளிட்ட விடயங்கள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமானால், அங்கு மாகாண சபைத் தேர்தல் நடத்துவது அவசியம் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அ.தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.தம்பிதுரைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு தமிழர்களுடன் அதிகாரப் பகிர்வை உறுதி செய்ய முன்னர், மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைந்து நடத்த வேண்டும். மாகாண சபைகள் முழுச் சுதந்திரத்துடன் செயற்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

இலங்கை அரசியல் சட்டத்தின்படி தமிழர்களுக்காக வழங்கப்படும் என்று தெரிவித்த அனைத்து விடயங்களையும் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இவற்றை இந்திய அரசு இலங்கை அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சர்வதேச தீர்மானத்தின் வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்தாலும், தனது நிலைப்பாட்டை எழுத்து ரீதியாகத் அறிவித்துள்ளது.

தமிழர்கள் கோரும் சமத்துவம், சம உரிமை, நீதி, நிலைத்த அமைதி, சமாதானம், குடிமக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதாக, சர்வதேச நாடுகளுக்கும் முன்னர் அளித்த வாக்குறுதிகளை, ஒப்புரவு அடிப்படையில் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதையும் தெரியப்படுத்தியுள்ளோம் என்றுள்ளது.

(ம-ப,4)

# அதிகாரத்துக்காக ஆடுகின்றது அரசு

## எரான் விக்கிரமரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 21

அரசியல் அதிகாரத்தை பலப்படுத்திக் கொள்ள நீதிமன்றத்தின் அதிகாரத்தை இரத்து செய்து, ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயற்பட முயற்சிக்கின்றது அரசு. இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம்பெற்றதில்லை இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிர மரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் சபாநாயகருக்கு அறிவிக்காமல் எந்தவொரு விடயத்தையும் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்க முடியாது. எனினும் துறைமுக நகர சட்ட வரைவு அதில் சேர்க்கப்பட்டுள்ளது. நாடாளுன்றத்தில் பெரும்பான்மையை உபயோகித்து, இதனை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று அரசு எதிர்பார்த்திருக்கக் கூடும்.

2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலங்களில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன், மீண்டுமொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் மூலம் அரசிலுள்ள பலரும், அரசுக்கு நெருக்கமானவர்களும் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசு பல செயற்பாடுகளையும் மறை முகமாகச் செய்ய முற்படுகின்றது -என்றார்.

(ப-4)

# கூட்டமைப்பின் கோரிக்கை பீரிஸுக்கு மகிழ்ச்சியாம்

கொழும்பு, ஏப். 21

மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையால், மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்று கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் தள்ளிவைக்கப்பட்டதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தொடர்புபட்டிருந்தது. முன்னாள் அரசில் தாக்கல் செய்யப்பட்டு தவறாக அங்கீகரிக்கப்பட்ட சட்ட வரைபு காரணமாக மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியவில்லை. பழைய தேர்தல் முறையை ஒழித்த அந்த சட்ட வரைபு, புதிய தேர்தல் முறைமையொன்றை அங்கீகரிக்கத் தவறியது. தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு, ஆறு மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் - என்றார்.

(ப)

*பற்றைக்குள் மறைக்கப்பட்ட நிலையில்*

# பெருமளவு கஞ்சாப் பொதிகள் கிளிநொச்சியில் நேற்று மீட்பு!



கிளிநொச்சி, ஏப். 21

கிளிநொச்சி, பூநகரி பள்ளிக்குடா பகுதியில் இருந்து ஒரு தொகை கேரளக் கஞ்சாவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று மீட்டுள்ளனர்.

கிளிநொச்சி விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து யாழ் - மன்னார் வீதிக்கு அண்மித்த பகுதியில் உள்ள பற்றை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள் என. மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் சுமார் 185 கிலோ எடையை உடையதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ-6,213,214, 113)

# துறைமுக நகருக்குள் இரண்டு சட்டங்களா?

## புத்தசாசன அமைச்சில் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 21

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு, புத்தசாசனம் பாதுகாப்பு மற்றும் புத்தமத வளர்ச்சி என்ற அரசமைப்பிலான ஏற்பாடுகளுக்கு முரணானது.

புத்தசாசன கொள்கையைப் பாதுகாக்க புத்தசாசன அமைச்சு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், புத்தசாசன அமைச்சில் முறைப்பாடளிக்கப்பட்டு ள்ளது. ஓமல்பே சோபித தேரர் இந்த முறைப்பாட்டை அளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

இந்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட் டால் துறைமுக நகரத்துக்குள் இரு வேறுப்பட்ட சட்டங்கள் செல்வாக்குச் செலுத்தும்.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு மாத்திரமல்ல, நாட்டு மக்களுக்கும் உண்டு. அரசு தவறான வழியில் செயற்படும் போது தவறைச் சுட்டிக்காட்டும் பொறுப்பும் மக்களுக்கு உண்டு - என்றார்.

(ப-4)

**வேலையாட்கள் தேவை**

சைவ உணவகமொன்றிற்கு
அனுபவமுள்ள சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை.
வண்ணை சாந்தையர்மடம்.
கற்பக விநாயகர் கோவில் அருகாமை (K.K.S. றோட்)
074 093 0200

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1½ பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.
(கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)
தொடர்பு கொள்ளும் நேரம் காலை 9.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை
தொடர்பு :
077 468 3354, 077 288 0152, 077 203 6402

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கிழக்கு ஐயனார் வீதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 m தூரம்)
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை)
ஒரு பரப்பு 5 இலட்சம்
077 814 7389, 077 614 7333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 [illegible] த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.